பான் ரெ. 15. விலை 2 அணா REGD NO. 4642

திராவிடநாடு

மலர் 13 | 15—8—54 | இதழ் 7

கடிதம் எழுதும் 'கட்டம்'

ஓய்வுக்காக வந்தேன்.

உயரத்திலிருந்து பார்க்கிறேன்.

ஆகா! எவ்வளவு பெரிய பரந்த பூமி, நம்முடையது.

கனி குலுங்கும் சோலை! மலைகள்! மாநதிகள்!!

அரசியல் அலைகளில் தத்தளிக்கும் என்னால், இப்போதுதான், நிம்மதியாகயோசனை செய்ய முடிகிறது.

ஆலோசிக்கும்போது, என்னுடைய அகம்மகிழ்கிறது!

இவ்வளவு பெரிய நாட்டை, எப்படிக் கட்டிக் காப்பது?

யோசிக்கிறேன்.

அப்போது தோன்றிய எண்ணங்களை உங்களுக்கெல்லாம் எழுதுகிறேன்!

*

"நண்பர்களே!

சுதந்திரப்போருக்காக எவ்வளவு கஷ்ட நஷ்டங்களையும் ஏற்கத்தயாராகயிருந்தோமோ, இன்று அவ்வளவுக்கவ்வளவு சோம்பேறிகளாகிவிட்டோம். நமது இலட்சியத்தின் அருமை பெருமைகளை எண்ணிப்பார்ப்பதில்லை; நாம். பதவிக்காகச் சண்டைபோட்டுக்கொண்டு நம்முடைய விரோதங்களை வளர்த்துக்கொள்கிறோம். இந்த இடத்தில், நிம்மதியாக உட்கார்ந்துகொண்டு, நாட்டின் நிலைமையையும் நாம் நடந்துகொள்ளும் விதத்தையும் எண்ணிடும்போது, பெருங்கவலையாயிருக்கிறது. உங்களையெல்லாம் மன்றாடிக்கேட்டுக்கொள்கிறேன்— மக்களுடன், பழகுங்கள்! அவர்களிடம் நாம் சாதித்திருக்கும் காரியங்களை எடுத்துச் சொல்லுங்கள்! அவர்கள் கூறுகிற குறைகளையும், காதுகொடுத்துக் கேளுங்கள் அப்படிச் சொன்னால்தான், உங்கள் கட்சியை நீங்கள் காப்பாற்றமுடியும். இல்லையேல், சிறிது நாட்களில் சிதைந்து சின்னாபின்னமாகிவிடும்.

உங்கள் அன்புள்ள

....

*

"என்னருமை சகாக்களே!

எவ்வளவு பெரிய பொறுப்பை ஏற்று நடத்திக்கொண்டு இருக்கிறோம். ஒரு பெரிய தேசத்தை வாழ்விப்பதென்பது, இலேசான காரியமா? ஒரு பக்கம் கம்யூனிஸ்டுகளின் ரஷ்யா! மற்றொரு பக்கம் முதலாளிகளின் அமெரிக்கா!! இரண்டுக்கிடையிலும், ஒருவருடைய வலையிலும் விழாமல், தப்பித்தபடி நான் செய்யும் அரசியல் யூகங்களை யாருமே புரிந்துகொள்ளவில்லையே. நீங்கள் புரிந்துகொண்டால்தானே மக்களிடம் சொல்லலாம். கூட்டத்துக்குவந்தால், உங்கள் கவனம் எங்கோ இருக்கிறது. என் பேச்சை யாருமே கவனிப்பதில்லை. இப்படி நீங்களே அசிரத்தை காட்டினால், என்ன ஆகும் நம் நிலை? ஆலோசித்துப் பாருங்கள்.

உங்கள்

....

*

"நண்பர்களே!

ஆபத்து, ஆபத்து. ஆங்காங்கும் பலர், பல தினுசான முறைகளில் நமது ஒற்றுமையைச் சீர்குலைக்கத் திட்டம் போட்டு வேலை செய்கின்றனர். ஒன்றாக இருக்கக்கூடாதாம். பிரிந்துபோய் வாழ வேண்டுமாம்! எவ்வளவு பெரிய பூமி இது! பிரிய வேண்டுமாம். இதற்காக பல அரசியல் கட்சிகள் பலவிதமான போராட்டங்களை நடத்த ஆரம்பித்துவிட்டன. இதில் வெட்கக்கேடான விஷயம், நம்மைச் சேர்ந்தவர்களே, இதற்குக் காரணமாயிருப்பதுதான். அவர்கள்தான் இந்த அரசியல் கிளர்ச்சிகளை நடத்துகிறார்களாம்! ஐயோ — இது ஆகுமா? இப்படிப்பட்டவர்கள் வளர்ந்தால், இந்தியா என்ன ஆகும்! இவ்வளவு பெரிய நாடு — துண்டு துண்டாகப் போய்விடுமே. நினைக்

கும்போது, நெஞ்சம் கலங்கு கிறது.

பாசமுள்ள

....

*　　*　　*

இப்படி கடிதங்களை எழுத ஆரம்பித்திருக்கிறார், அவர்! ஓய்வுக்காக மலைபடிவாரத்துக்கும், குளிர்மாச் சோலைகளுக்கும் செல்லும்போதெல்லாம், இத்தகைய எண்ணங்கள் மனதைக் குடைகின்றனவாம்! கட்சி கலகலத்துப் போய்விடுமோ—காசாசை கொண்டவர்களின் கூடாரமாகிவிட்டதோ—பிரிவினைச்சக்திகள் பெருத்துவிடுமோ என்கிற பெருங் கவலை ஆட்டிப்படைக்கிறதாம், அவர் நெஞ்சை. அதனை கடிதங்கள்மூலமாக, இமயமுதல் குமரிவரை இருக்கும் காங்கிரஸ் தலைவர்களுக்கு அடிக்கடி எழுதிக்கொண்டிருக்கிறார். கடிதம் எழுதித்தான் இந்த விஷயங்களைத் தெரிவிக்க வேண்டும் என்ற நிலைமையிலிருக்கும் நீங்களும், நானுமல்ல—அவர். விரலசைத்தால், படம் பிடித்துப் போட்டு, விளம்பரம் செய்யக்கூடிய ஏடுகள் உண்டு—குரலைப் பிடித்தடக்கி ஒலிபரப்பும் வானொலி நிலையம் இருக்கிறது, கையில்—விதவிதமான முறையில் படம் பிடித்துக் காட்டும் திரைப்படசெய்தி இலாகாவும் இருக்கிறது. எனினும், கடிதங்கள் எழுதுகிறார்! தன்னுடைய கையெழுத்திட்டு வரும் கடிதங்களைக் காணும் ஆங்காங்குள்ள தலைவர்கள் அதற்காவது விசேஷ மரியாதை தரமாட்டார்களா எனும் எண்ணத்தில்! பாராட்டக்கூடிய ஆசை. அரசியல் அலைகளுக்கிடையில் கிடைக்கும் ஓய்வு நேரத்திலும் சிந்தித்து, அந்த சிந்தனைகளை வடித்தெடுத்து, கட்சியை வளர்க்கும் தோழர்களுக்கு தெரிவிக்கிறாரே—என்று எண்ணும்போது, கட்சிமீது அவருக்குள்ள பற்றும் பாசமும் விளங்குகிறது! பாராட்டக்கூடிய விஷயமே. அவ்வண்ணம் அவர் தீட்டி அனுப்பியதாக வெளிவரும் ஒவ்வொரு கடிதமும் 'எனக்குக் கிடைத்த ஓய்வு நேரத்தில் ஆலோசித்ததன் விளைவாக, என் மனதில் தோன்றிய எண்ணங்களை வெளியிடுகிறேன்' என்றுதான் ஆரம்பமாகிறது. அதனைக் காணும்போது, அய்யோ பாபம்! ஓய்வில்லாத இயந்திரமாக உழைக்கிறார்! எனினும், இவ்வண்ணம் கடிதம் எழுதி கட்சியைக் காப்பாற்றுவதில் சிரத்தை காட்டுகிறார் என்றே ஒவ்வொருவரும் எண்ணிடுவர். அடிக்கடி இப்போது, அவரிடமிருந்து ஆங்காங்குமுள்ள மாகாண காங்கிரஸ் தலைவர்களுக்கு கடிதங்கள் செல்லுவதாகச் செய்திகள் வருகின்றன—கோடையின் வெம்மையைத் தணித்துக்கொள்வதற்காக சிம்லா சென்றார்! கடிதம், தீட்டப்பட்டது! மலைப்பிரதேசங்களைப் பார்வையிடச் சென்றார். புறப்பட்டது இன்னொரு கடிதம்! டல்ஹவுசிக்குச் சென்றார் — இப்போது வந்திருக்கிறது மற்றோர் கடிதம்!! இப்படி தீட்டப்படும் கடிதங்களைக் காணும்போது, யாவும் அவருடைய வேதனைகளைச் சொல்வதுபோலவே இருக்கின்றன. என்ன செய்வது! எல்லோரும் இப்படிச் செய்கிறார்களே! கட்சி கரைகிறது! போட்டி அதிகமாகிவிட்டதே! — என்ற இதய ஒலியின் விளக்கம்போலவே, இருக்கின்றன அவை. அவ்விதம் தீட்டுகிற போது, அவைகளில் அடிக்கடி ஒரு விஷயத்தை மட்டும் வலியுறுத்துகிறார்—அதுதான், 'எவ்வளவு பெரிய பூமி நம்முடையது! இதைச் சீர்குலைக்கும் சக்திகள் தோன்றிவிட்டனவே!' என்பது. இந்த உண்மை, டில்லி மாளிகையில் அமர்ந்திருக்கும்போது ஏற்படுவதில்லை—தனியாக சிந்திக்கும்போது உண்டாகிறது. கூறுவது, அவர்! கவனத்தில் வையுங்கள், தனியாகச் சிந்திக்கும்போதாம்!! அப்படிச் சிந்திக்கும்போது, அன்பரின் மனதில் கலக்கமும் கலவரமும் உருவாகிறது, டில்லி மாளிகையில் பிரதமர் எனும் பீடத்திலிருந்தபடி, அமெரிக்கத் தூதுவருடன் கைகுலுக்கும் போதும், சீனப்பிரதமருக்கு விருந்துவைக்கும்போதும் சிங்காரமான ஆடல்பாடல்களில் அங்கம் ஏற்கும்போதும், அந்த சிந்தனை எழும்புவதில்லை, மனதில்! தனியாக உட்கார்ந்துகொண்டு, சிந்திக்கும் போது, தோன்றுகின்றனவாம் பல உண்மைகள்!! பண்டித நேருதான் இவ்வண்ணம் தீட்டுகிறார்.

இப்போதுதான் ஒரு பொதுக் கூட்டத்திலிருந்து திரும்பி வந்தேன்.

ஏராளமான மக்கள் கூடியிருந்தனர், என்னைக் காண. அவர்கள் என் மீது வைத்திருக்கும் பாசத்தையும் அன்பையும் கண்டேன்.

அவைகளை நிறைவேற்றி, வாழ்க்கையைச் செப்பனிட முடியுமா, என்னால்?

என் கட்சிக்காரர்களே, இப்படி சண்டை போட்ட வண்ணம் கிடக்கிறார்களே!

தனிமையான இடத்தில் அமர்ந்து ஆலோசிக்கும்போது, இப்படிப்பட்ட எண்ணங்கள் மோதுகின்றனவாம், அவர் மனதில். எழுத்தில் வந்தவை, இவை! எழுத்தில் வாராமல், தனிமையாக ஆலோசிக்கும் போது, இப்படிப்பட்ட எண்ணங்களும் குடையாமலா இருக்கும்?

அகில இந்தியாவுக்கும் ஏகதலைவனாகயிருக்கிறேன்.

அந்தப் பெருமையால்தான் அகில உலகமும் மதிக்கிறது, என்னை.

தங்கை விசயலட்சுமி, தரணி ஆளும் சபையிலிருப்பது, அதனால் தான்.

இந்தப் பெருமைக்கு வேட்டு வைக்க, எழும்பியிருக்கிறதே, பிரிவினை முழக்கம்!

திராவிடநாடாம்! ஆறுகோடி மக்களாமே!!

அதனை காங்கிரசார்கூட ஆதரிக்கின்றனராமே.

இப்படியெல்லாம் அவர் எண்ணியிருக்க வேண்டும். ஆனால், இவைகளை எழுதமுடியாதல்லவா, கடிதத்தில்? என்ன எண்ணுவர், தன்னுடைய சகாக்கள்! நேருகண்டு மிரளுமளவுக்கா வளர்ந்து விட்டது—அவரே அஞ்சுகிறார்—என்றுதானே சகலரும் பேசுவர். அதனாலேயே, சூசகமாக தன்னுடைய வேதனைகளைத் தெரிவித்திருக்கிறார், இம்முறை டல்ஹவுசியிலிருந்து தீட்டிய கடிதத்தில். நாட்டில் பிரிவினை விரும்புவோர் அதிகமாகி வருகிறார்களே! இவ்வளவு பெரிய பூமி, சிதைந்து சின்னாபின்னமாவதா?—எனக்கேட்கிறார், காங்கிரஸ் தலைவர்களை.

மறந்துவிடவேண்டாம், குடியாத்தம் தேர்தலில் காமராஜர் வெற்றி பெற்றதற்குப் பின் நேரு பண்டிதர் திட்டியிருப்பதுதான், இந்தக் கடிதம். காங்கிரஸ்காரர்கள்கூட பிரிவினை சக்திகளை ஆதரிக்கின்றனராம் —பண்டிதர் சொல்வது, இது. இதே குற்றச்சாட்டைத்தான் இங்குள்ள ஆச்சாரியாரின் ஏடுகளும் கூறுகின்றன. குடியாத்தம் தேர்தலில் பலர், ஆதரித்தனர் — காங்கிரசையல்ல! காமராஜரை!! அவருடைய வீழ்ச்சியால் விளையக்கூடிய வேதனைகளை எண்ணியதால், பலர் முன்வந்து ஆதரித்தனர். ஆரியம் கைகொட்ட காத்திருக்கிறது! அவர் வீழ்ச்சியடைந்தால் தன்னுடைய கல்வித்திட்டத்துக்கு மக்கள் தந்த தீர்ப்பு — என்று கயிறு திரிப்பார் ஆச்சாரியார்! — என்கிற காரணத்தால், ஆதரித்தனர், அவரை. அந்த ஆதரவு, தவறு செய்த தனயனை, ஆபத்து நேரத்தில் அணைத்துக் காக்கும் இனப் பண்பு! பசுக் கூட்டத்தில் புலி நுழைந்தால் அதனை அடக்க யாவும் ஒன்று சேருமன்றோ? காரணம் அதுதான். ஆனால் பண்டிதர், அங்கிருந்து கடிதம் தீட்டுகிறார் — அச்சத்துடன்! பிரிவினைச் சக்திகளுக்கு காங்கிரஸ்காரர்களே ஆதரவு தருகிறார்களாம்—எத்தனை நாட்களுக்குத் தாமலிருக்கமுடியும்? கிளிக் கூட்டம், பருந்துப் பொந்திலே எத்தனை நாளைக்கு வாழமுடியும்? இதனை உணர்கிறார், பண்டிதர். அதுவும் ஓய்வு கிடைத்து, உட்கார்ந்து சிந்திக்கும் போது! எதிர்காலம் தெரிகிறது, மனக்கண்ணில்! எண்ணிடும் போது திட்டுகிறார், இவ்வண்ணம்!! ஒரு இனத்தின் விடுதலைப்போரில், மாற்றார் கலங்கிடும் கட்டம், இது. அதனால்தான், நேருபண்டிதர், கடித மூலம் அன்பையும் ஆதரவையும் நிலைநாட்ட முயற்சிப்பது, இந்த முயற்சியெல்லாம், வெற்றியா தர முடியும்? எழுத்துக்கள், அவரிடமிருந்து வருபவை! இதயமல்லவோ, நாம் திறந்து காட்டுவது!!

★

பட்டம், பழி பெற்றார்!

ஆகஸ்டு 6-ந்தேதி, 110 தி. மு. க. தோழர்கள் கைதாயினர்.

அவர்களில் 23-பேருக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

*

செய்திகள், உலாவில்லை! தித்திக்கும் தகவல் பெற்றோம், இரண்டு நாட்களில்!! இதுவரை கைது செய்யப்பட்ட, திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் தொண்டர்களும் தலைவர்களும் விடுதலை செய்யப்பட்டனர், என்று பட்டம் தாணு அறிவித்தார். ஒருவர் இருவரல்ல, 919 தோழர்கள்! அவர்களிலே இருவர், பார்லிமெண்டு உறுப்பினர்கள்! இருவர் நகரசபைத் தலைவர்கள்! பதினொரு பஞ்சாயத்துபோர்டு தலைவர்கள்! சட்டசபை உறுப்பினர்கள் பலர்! அவர்கள் அனைவரையும், சிறையினின்று விடுதலை செய்வதாக திருவாங்கூர் அரசு, தெரிவித்தது. விவேகம் அரும்புகிறது என எண்ணினோம்! ஆள்வது காங்கிரசாட்சி அல்ல, ஆகவே கொஞ்சம் யூகத்துடன் நடக்கிறது என்று கருதினோம். திருவாங்கூர் தமிழர் அறப்போர், குடத்திலிட்ட தீப் போலிருந்த நிலைமாறி, குமுறும் எரிமலையாக மாறுவதைக் கண்டு பட்டம் சர்க்கார், செய்த முடிவு என்றே நம்பினோம். படிப்படியாக உரிமைப் போருக்குத் தன்னாலான உதவிகளைச் செய்து, டில்லியின் சூழ்ச்சியிலிருந்து விடுபடும் என எதிர்பார்த்தோம்! திடுக்கிடும் தகவல் கிடைத்திருக்கிறது—11ந் தேதி நடைபெற்ற விடுதலை தினத்திலே, மூன்று இடங்களில் பதினொரு உயிர்கள் (தகவல்படி) சுட்டு வீழ்த்தப் பட்டனவாம்!! துப்பாக்கி துரைத்தனம் ஏந்திடும் எந்த சர்க்காரும் கூறுகிற பதிலையே, பிரஜாசோஷியலிஸ்டு ஆட்சியும் தெரிவிக்கிறது — நிலைமை கட்டுக்கடங்காமல் போனதன் காரணமாக, சுட்டனராம்!!

பதினொருவர் பிணமாயினர்—பலர் படுகாய முற்றனர். பரிதாபத்துக்குரிய செய்தி! கண்ணீர் வடிக்க வேண்டிய சம்பவம்!!

காந்திராமன் என்பார், கடந்த பல நாட்களாக பட்டினிப் போர் நடாத்துகிறார் எனும் செய்தியைக் கேள்விப்பட்ட போதே, என்ன செய்கிறது திருவாங்கூர் அரசு, என்று திகைத்தோம்.

இப்போது தெரிகிறது! தமிழர் தம் உரிமைப்போரை நசுக்குவதென்ற திடமான முடிவுடன்தான், இருந்திருக்கின்றனர் போலும்.

எதிர்பார்க்கவில்லை, நாம்! டில்லியின் சாதுர்ய விளையாட்டுக்கு இரையாகும் இவர்களாட்சி, என்று நினைக்கவில்லை நமது நெஞ்சு!!

நேரு, அதோ, சிரிக்கிறார்—தான் எதிர்பார்த்த நிகழ்ச்சி நடைபெறுவதைக் கண்டு கேலியாகச் சிரிக்கிறார்—இதுவரையில் பஞ்சன் கயிறுகளை அறுத்த கட்சி எனும் 'மகாத்மியம்' காங்கிரசாட்சிக்கு மட்டுமே இருந்ததென்றீரோ! அதோ பாரீர்! பட்டம் தாணு, காங்கிரசல்ல—பிரஜா சோஷியலிஸ்டு. உரிமைக்காக நீதி மன்றத்தில் வாதாடும் அசோகமேதாவின் கட்சி அய்யா, அது. அது, நடத்தியிருக்கிறது, துப்பாக்கிப் பிரயோகம்!—என்று, கூறாமல் கூறுகிறார்.

மலையாளியும் தமிழனும் மோதிக்கொள்ள வேண்டும் — மாச்சரியங்களை வளர்த்துக்கொள்ளவேண்டும் —தீராப் பகை மூளவேண்டும்— இடையில் தான் பெரிய மனுஷனாக விளங்கவேண்டும், இதுவே டில்லியின் சதித்திட்டம். அதனை பட்டம் சர்க்கார் உணராமல் பலியாகிவிட்டது! மீளாத பழியைச் சூட்டிக்கொண்டுவிட்டது!!

919 தோழர்களைச் சிறைக்கு அனுப்பியபோது, 'பழையகள்! புதிய மொந்தையோ?' என்றெண்ணினோம். பார்க்கவேண்டியதுதான் ஒரு கை!—என்றும் கருதினோம். அதனாலேயே தி. மு. க. தோழர்கள் அடையாள மறியலில் ஈடுபட்டு 110 பேர் ஒரே நாளில் சிறைக்கூடம் சென்றனர். அதன்பின் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்! விடுதலை இயக்கம், அரசியல் சார்பற்று, மக்களின் உரிமைப் போராக மாறுவதைக் கண்டு மருண்டதன் விளைவு! விவேகமான முடிவு!! — என்று நல்லோர் கருதினர். நாசச்செய்தி வந்து தாக்குகிறது இன்று! பதினொருவர் பிணமாயினராம்—11 உயிர்கள்!! குண்டு மாரிக்குப் பலியாயினவாம். கொடுமை! கொடுமை!! அதற்கு விளக்கம் தந்துள்ள சர்க்கார், அரசாங்க பஸ்களைக் கொளுத்தினர், அதிகாரிகளைத் தாக்கினர், அடக்க முடியாத அளவுக்கு வெறியாட்டம் ஆடினர் என்று விபரம் தருகிறது. இது, கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன பதில்! காங்கிரசாட்சி துப்பாக்கிப் பிரயோகம் செய்த ஒவ்வொரு முறையும் தெரிவித்த பதில்! வேட்டையாடிய வெள்ளையன் சொல்லிக் கொடுத்துச் சென்ற பதில்! அதனையே பட்டம் சர்க்காரும், பாடிக் காட்டுகிறது.

நிலைமை கட்டுக்கடங்காமல் போயிற்றாம்! காரணம் யார்? கலவரமும் குழப்பமும் ஏற்படுமளவுக்கு நிலைமையை வளர்த்தது யார்? சுடப்பட்டு மண்ணில் வீழ்ந்ததே 11 உடல்கள்! அவை யாருடையவை? நேற்றுவரை, பட்டம், ஆட்சிக்குப் பாடுபட்டவைதானே! திருவாங்கூர் அரசுக்கு வரி தந்தவைதானே!! நாளை நாமும் மலையாளிகளும், அண்ணன் தம்பிகளாய் வாழவேண்டும் என்று எண்ணியவைதானே? அந்த உயிர்கள், காற்றோடு கலந்துவிட்டனவே இன்று! காணமுடியுமா அவர்களை? காட்டுவாரா, பட்டம்? அழுதகண்ணீருடன் தேம்பும் அந்நால்வரின் குடும்பத்துக்கு ஆறுதலை வழங்கமுடியுமா, பிரஜா சோஷியலிஸ்டுகளால்? பூமிதானம் — இதயதானம் — ஆயுள் தானம்—என்று ஆர்ப்பரிக்கின்றனரே, அந்த உயிர்களை, தானம் பெற்று தந்திட முடியும்! சுடுவதற்கு முன்பு, சுடாமலேயே அவர்களைக் கலைந்தோடச் செய்யக்கூடிய கண்ணீர்ப் புகையும் வெத்து வேட்டுகளும் உண்டே!— அவைகளை விட்டுவிட்டு, கேரள போலீசார் சுட்டு வீழ்த்துமாறு நிலைமையை வளர்த்ததேன்?

பட்டம் தாணு, மீளாத பழியினைச் சூட்டிக்கொண்டார்! அந்தப் போக்கு சரியா என்பதை, இங்குள்ள சோஷியலிஸ்டுகள் எண்ணிடவேண்டும். இதுதானா வழி! இதுதானா, முறை!! கோரிக்கையை மறுக்க பட்டம் யார்? நசுக்கவும் இவரேன் துணியவேண்டும்? அந்த ஆசை நேருவின் சொந்தச் சொத்தன்றோ! இன்று அவருடைய சொக்கட்டானாகிவிட்டாரே!! எவ்வளவு பெரிய வீழ்ச்சி.

உரிமைப் போரில், இத்தகைய கொடுமைக்கட்டம் ஏற்பட்டமைக்கு மிகவும் வருந்துகிறோம். அநியாயமாக உயிரிழந்த அப்பதினொருவரின் குடும்பத்துக்கும் நமது அன்பு கலந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்! உரிமைப் போருக்கு நாஞ்சில் தந்த விலை மிகப் பெரிது! மறக்கொணாத விலை! இன்னும் அதிக சிக்கல் வளருமுன் பட்டம் சர்க்காரே தமிழரின் கோரிக்கையை ஏற்று முன்னின்று நிறைவேற்றவேண்டும். பழிக்குள்ள ஒரே கழுவாய், அதுதான்! வேறில்லை!!

❀

ஒரு புதிய மேதை!

"எல்லாம் இருக்கிறது இங்கு! ஆனால், அவைகளை நிர்வகிக்கும் பெருந்தன்மைதான் இல்லை. போலி கவுரவத்துக்காக பல திட்டுகளைப் பிடித்துவைத்துக்கொண்டு சாம்ராஜ்யம் என்று பீத்திக்கொள்கிறீர்கள். அந்த வீண்பெருமை ஒழிந்தால், நாடு உருத்தேறும்! உலகத்தின்முன்பு, உன்னதமாகத் திகழும்!!"

*

அவன் பேச்சை யாரும் கேட்கவில்லை! அனுப்பு ஆயுதங்களை—எங்கே வீரர்கள்—கொண்டுபோய்க் குவி—பணம் இல்லையா, அமெரிக்காவைக் கேட்போம் என்றே அவனது நாட்டு அதிபர்கள் ஆர்ப்பரித்தனர்! அவைகளைக் கண்டபோதெல்லாம், அவன் சொன்னான்— "தோழர்காள்! ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிடும் சுதந்திர வீரர்களுக்குமுன்பு துப்பாக்கிகளும் குண்டுகளும் என்ன செய்ய முடியும்? ஆறேழு ஆண்டுகளாகப் போரிட்டோமே—கண்ட பலன் என்ன! வேண்டாம் இந்த வீண் வேலை! கவுரவத்தோடு, ஆட்சியை அவர்களிடம் ஒப்படைத்து வந்துவிடு" என்பதாக. அப்போதும், அவன் குரல், அவர்கள் காதில் ஏறவில்லை.

*

"யார், அவன்?"

"அதுதானப்பா! சண்டை முடிந்ததும், கள்ளமார்க்கெட்காரர்களைக் கண்டுபிடிக்கவேண்டும், கொள்ளை லாபம் அடித்தோரின் பணக்கத்தைகளை செல்லுபடியாகாமல் சட்டம் போடவேண்டும், உற்பத்தியாகும் பொருள்களை மக்களுக்குக் கிடைக்கும்படி பங்கிட்டுத் தரவேண்டும், என்றெல்லாம் பேசினானே அவன்தான்!!"

"அவனா? அப்படியென்றால் இப்படித்தான் பேசுவான்! பிரான்ஸ் நாட்டு பாங்கிகளை எதிர்த்தபோது கூட, வளையாதவனல்லவா? நமது நிதி மந்திரி இசையாததைக் கண்டு, ஏசிப் பேசியவனல்லவா!"

"பிரதம மந்திரி டி'காலேகூட அவனைக் கண்டு மிரண்டார், என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதே ஆள்தான், இவன்!!"

இப்படிப் பேசிக்கொண்டனர், பிரெஞ்சுநாட்டு பூபதிகள். அவனுடைய தூய்மையை, நல்லெண்ணத்தை ஏற்க சம்மதிக்கவில்லை, அவர்கள்! ஏனெனில், அவன் கூறும் விஷயங்கள் யாவும் — இந்தோசீனாவைக் கைவிடு — ஏழைகளைப் பார்!—வீண் போர் வேண்டாம்— என்பதுபோன்ற நல்லுரைகளாகயிருந்தன. அந்த நல்லுரைகளை ஏற்று நடக்கும் பண்பு இருந்திருந்தால், பிரான்சில், வாரத்துக்கொரு

(15-ம் பக்கம் பார்க்க)



14. துப்பறிவதில் ஆதிமூலம்!

"அதை இனிப் பொத்திவைக்க முடியாது, மானேஜர். இதோ, இப்பொழுது நல்லமுத்துவைக் கைது செய்துவிட்டார்கள். இனி பேப்பர்களுக்கு போலீஸ் நியூஸ் கொடுத்தாகணுமே! கட்டாயம் நாளை காலை நம்ப குடும்பத்தின் பேரு சந்தி சிரிக்கப்போகுது!" என்று தலையில் கை வைத்துக்கொண்டு அப்படியே உட்கார்ந்தார், பாஸ்கர். புஷ்பாவிற்கு அழுகையே வந்துவிட்டது.

இவைகளைக் கவனித்தவண்ணமே அங்கு வந்தான், ஆறுமுகம். அவனைக் கண்டதும் சாம்பசிவம் "டேய் ஆறுமுகம்! நீ இன்றைக்கு வீட்டுக்குப் போகவேண்டாம். காலிப் பசங்கள் ஏதாவது கலாட்டா செய்வாளுவ. இங்கேயே-படுத்துக்கோ" என்றார். ஆறுமுகத்திற்கு இந்தத் திடீர் உத்தரவுக்கு என்ன பதில் கூறுவது என்றே புரியவில்லை. இதற்குள் பாஸ்கரும், "ஆமாம் ஆமாம்... நீ இங்கேயே படுத்துக்கோடா. இதுவேறே, இன்னும் சிக்கல் அதிகமாகிவிடப்போகுது!" என்றார்.

ஆறுமுகத்திற்குப் பேசாமல் திரும்புவதைத் தவிர வேறு வழியில்லை. வெளி வராந்தாவிற்கு வந்து தூணருகில் உட்கார்ந்தான்.

பாக்யபவனத்திலேயே படுத்துக் கொள்வதா?

ஐயோ! எவ்வளவு காரியங்களை அவன் பாக்கிவைத்திருக்கிறான். பொன்னியிடம் கொடுத்த பண முட்டையின் கதி என்னவாவது? மேற்கொண்டு எப்படி நடந்துகொள்வது? கோர்ட்டிலே சாட்சி கூற நேர்ந்தால், அப்பொழுது எப்படிக் கூறுவது?

இந்தமாதிரி எத்தனையோ விஷயங்களை ஆறுமுகம் முடிவுசெய்தாக வேண்டுமே!

இதற்கு நிம்மதியான இடம் பொன்னியின் குடிசைதானே! அதைவிட்டுவிட்டு, இந்தப் பங்களாவிலேயே இருந்தால், அவன் மனம் ஒரே குழப்பமாகத்தானே இருக்கும்.

ஆனால், இப்போது குடிசைக்குப் போகப்போகிறேன் என்று எப்படிக் கூறமுடியும்? அப்படிச் சொன்னாலே, அது ஏதாவது ஆபத்தைக் கொண்டுவந்து சேர்த்தாலும் சேர்க்கும். ஆகவே, பேசாமல் இங்கேயே இன்றிரவைக் கழித்துவிட வேண்டியதுதான், என்று எண்ணிக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

சிறிது நேரத்திலே குப்பன்வந்து சாப்பிடக் கூப்பிட்டான். மத்தியானம்போலவே மனமெல்லாம் நல்லமுத்துவின் மேலிருக்க, கொஞ்சமாகச் சாப்பிட்டுவிட்டு வந்து படுத்துக்கொண்டான், ஆறுமுகம்.

*

கார்ஷெட்டிலே ஆறுமுகத்திற்குத் தூக்கம் எப்படிவரும்? பழைய ஞாபகங்கள் ஒவ்வொன்றாக அவன் மனக்கண் முன் வந்து வந்து மறைந்து கொண்டிருந்தன. அடிக்கடி நல்லமுத்துவின் உருவம் தோன்றியது. காரைப்பார்த்தால், அதில் பிள்ளை இறந்துகிடப்பது போன்ற காட்சி தோன்றியது. அப்படியே பயந்து தலைமேல் போர்வையைப்போர்த்திக்கொண்டு திரும்பிப் படுத்துக் கொண்டான்.

காலையிலே ஆறுமுகம்எழுந்திருக்கும்போழுது ஆறுமணி இருக்கும். தோட்டத்திலே இருந்த குழாயின் முகத்தைக் கழுவிக்கொண்டு முன் வாயிலுக்கு வந்தான்.

அன்றைக் காலைத் தினப் பத்திரிகைகள் வந்துகிடந்தன. அவைகளை எல்லாம் எடுத்துக் கொண்டுபோய் ஹாலிலிருந்த மேஜைமேல் வைத்தான், ஆறுமுகம். வைத்துவிட்டுத் திரும்பும்போதுதான், அந்தப் பத்திரிகைக்குவியலிலே "காலைசெய்தி" யும் கிடந்தது, அவன் கண்ணுக்குப் பட்டது. ஆஹா! அவன் 'காலை செய்தி' யைப் படித்து ஒரு வாரமாகிவிட்டது. உத்தமநாதபுரத்திலே எழிமுட்டு ரிக்ஷாவாலாக்களாக உட்கார்ந்துகொண்டு அந்தப் பத்திரிக்கையைப் படிக்கும்போது அவனும் கேட்டிருக்கிறான். எத்தனையோ விதமான செய்திகள்! கோர்ட்டிலே குற்றவாளிகள் கொடுத்த விசித்திர வாக்கு மூலங்கள்; கணவனை வஞ்சித்தவள் காட்டிய காரணங்கள்; பிள்ளையைக் கொன்ற பேதை; பெண்ணைக் கெடுத்த காதகன் பேசிய பேச்சு எல்லாம் 'காலை செய்தி'யில் தினம் வரும் செய்தித் துண்டுகள். இவைகளையெல்லாம் எங்காவது இரவல் பேப்பர் கிடைத்தால், விடாமல் படித்திருக்கிறான், ஆறுமுகம்! இன்றும் அதுமாதிரி 'காலைசெய்தி'யைப் படிக்கவேண்டுமென்ற எண்ணம் தோன்றியது அவனுக்கு.

திரும்பிவந்து 'காலைசெய்தி'யை மாத்திரம் எடுத்துக் கொண்டு கார் ஷெட்டுக்குப் போனான்.

பத்திரிகையை விரித்ததும், முதல் பக்கத்திலே போட்டிருந்த

செய்தியே ஆறுமுகத்தை ஒரு குலுக்கு குலுக்கிற்று.

"பிரபல நகரத் தலைவர் மறைந்த மாயம்!"

"உத்தமநாத டெக்ஸ்டைல்ஸ் முதலாளியின் திடீர் மறைவு!"

"அரசியல் அறிவிலிகளின் கொடுங்கோன்மையா?"

என்ற தலைப்புகள் கொட்டை எழுத்தில் பத்திரிகையை அலங்கரித்தன.

தட்டுத் தடுமாறி உள்ளே செய்தியையும் படிக்க ஆரம்பித்தான், ஆறுமுகம்.

"உத்தமநாத டெக்ஸ்டைல்ஸ்" முதலாளி உத்தமநாதபிள்ளை அவர்களை நேற்றுக் காலையிலிருந்து காணவில்லை என்று போலீசார் அறிவிக்கின்றனர். அவருடைய பங்களாவிற்கு நமது நிருபர் சென்றபோது, அங்கு எந்தவிதத் தகவலும் தர அவர் மூத்தமகன் பாஸ்கர் மறுத்துவிட்டார். பிள்ளையின் உயிருக்கு ஏதாவது ஆபத்து இருக்கலாமோ என்று அஞ்சப்படுகிறது. இது சம்பந்தமாகப் போலீஸார் தொழிற் சங்கத் தலைவர் நல்லமுத்துவைக் கைதுசெய்திருக்கின்றனர்.

குறிப்பு: "உத்தமநாத டெக்ஸ்டைல்ஸி"ல் சென்ற இரண்டு மாதகாலமாக வேலைநிறுத்தம் நடந்து வருவதையும், அதற்கு மூலகாரணம் புரட்சி சங்கத் தலைவரான நல்லமுத்துதான் என்பதையும் இந்த இடத்தில் கவனிக்கவும்."

இந்தச் சிறிய செய்திக்குத்தான் அவ்வளவு பெரிய தலைப்புக்கட்டியிருந்தது. 'காலை செய்தி' படித்து முடித்ததும் ஆறுமுகத்திற்கு ஓரளவு திருப்தியாக இருந்தது. 'காலை செய்தி'யே நல்லமுத்துவின்மீது குற்றம் சுமத்தி எழுதிவிட்ட பிறகு, வழக்கில் எப்படியும் ஆறுமுகத்திற்கு வெற்றி கிடைக்காமலா போகும்?

பத்திரிகையிலே ஒரு பக்கத்திலே பிள்ளையின் படமும் மற்றொரு மூலையிலே நல்லமுத்துவின் படமும் போடப்பட்டிருந்தது. அந்த இரண்டு படங்களையும் பார்த்துக்கொண்டிருந்தான், ஆறுமுகம். அந்த நேரத்திலே வெளியே கார்கள் வரும் சப்தம் கேட்டது. எழுந்து ஓடிவந்தான்.

பழையபடி, போலிஸ் வான்கள் இரண்டும் வந்து நின்றன. ஆதிமூலம் அவசரம் அவசரமாக இறங்கினார். அவர் பின்னே இரண்டு போலிஸ்காரர்களும் இறங்கினர்.

ஆறுமுகத்திற்குப் பழையபடி திகில் வந்தது. பத்திரிகையை அப்படியே காரில் போட்டுவிட்டு பங்களா வாயிற்படிக்கு ஓடி வந்தான். அவனைக் கண்டதும் "டேய், போய் உங்கய்யாவை கூப்பிட்டு, வா!" என்று கூறிவிட்டு ஹாலுக்குள் நுழைந்தார் இன்ஸ்பெக்டர், ஆதிமூலம்.

இதற்குள் மாடியிலிருந்து புஷ்பாவே இறங்கிவந்தாள்.

"ஐயாவை கூட்டிக்கொண்டு வரச் சொல்றுங்க, அம்மா!"

இதைக் கேட்ட புஷ்பா மறுபடியும் மாடிக்குச் சென்றாள்...சிறிது நேரத்தில் புஷ்பாவும் பாஸ்கரும் இறங்கிவந்தனர். ஆறுமுகம் ஒதுங்கி நின்று, அவர்கள் உள்ளே சென்றவுடன் அவனும் பின்னே சென்றான். அவன் உள்ளே சென்றவுடன் காருக்கருகில் இருந்த இரண்டு போலிஸ்காரர்களும் வாயிற்படியில் வந்து நின்றுகொண்டனர்.

ஆறுமுகத்திற்கு ஒன்றும் புரியவில்லை. திரும்பவும்கார்ஷெட்டிற்கே போய் விடலாம் என்று புறப்பட்டான். அதற்குள், ஆதிமூலம் "ஆறுமுகம்!" என்றார்.

திடுக்கிட்டு அவர் பக்கம் திரும்பினான்.

"இங்கேயே, நில்லுடா! உன்னிடம் பேசணும்!" என்றார்.

ஆறுமுகத்திற்குப் பயம் தொண்டையை அடைத்துக் கொண்டது. பேசாமல் பாஸ்கரையும் புஷ்பாவையும் பார்த்தான்.

"என்ன, சார்! என்ன நடந்தது? புதிய செய்தி ஏதாவது உண்டா?" என்றார் பாஸ்கர்.

ஆதிமூலம் ஆறுமுகத்தைப் பார்த்தவண்ணமே, "வழக்கிலேபல விஷயங்கள் மறைக்கப்பட்டிருக்கின்றன, சார்! அவைகளைப் பற்றிப் பின்னால் கூறுகிறேன். முதலில் "இவனைப் பற்றித் தீர விசாரித்த பின்தானே வேலைக்கு வைத்துக் கொண்டீர்கள். அதைக் கொஞ்சம் விளக்கமாகக் கூறுங்கள்!" என்றார்.

பாஸ்கருக்கும் ஆதிமூலத்தின் கேள்விகள் ஒன்றும் புரியவில்லை. அவரும் ஆறுமுகத்தையே பார்த்தார். இரண்டு பேருடைய விழிகளுக்குமிடையே மாட்டிக்கொண்ட ஆறுமுகம் திகைத்துத் தலையை தொங்கவிட்டுக் கொண்டு சுவரோரமாக நகர்ந்தான். அங்கிருந்து வெளி வராந்தாவைப் பார்த்தபோது போலீஸ்காரர்கள் துப்பாக்கி முனை மாத்திரம் தான் தெரிந்தது. திடுக்கிட்டுத் தலையை இன்னும் தொங்கப் போட்டுக் கொண்டான்.

பாஸ்கரின் மௌனத்தைப்பார்த்தவுடன் ஆதிமூலம் தன் வேலையை ஆரம்பித்தார்.

"டேய், ஆறுமுகம்! உண்மையை ஒளிக்காமல் கூறணும். ஆமாம் இல்லையென்றால் தோலை உரிச்சுடுவேன்.

"இதோ பார்! உனக்கும் அந்தப் புரட்சி சங்கத்திற்கும் தொடர்புண்டா?" என்று அதட்டிய குரலோடு தன் கேள்விகளை ஆரம்பித்தார் ஆதிமூலம்.

ஆறுமுகத்திற்கு இன்ஸ்பெக்டரின் கேள்வியின் அர்த்தமே விளங்கவில்லை. எதற்காக அவர் இந்தக் கேள்விகளை கேட்கிறார் என்றும் யூகிக்க முடியவில்லை. பயத்தோடு தலையைத் தூக்கிப் பாஸ்கரைப் பார்த்தான். அதற்குள் பாஸ்கர் "இல்லை, சார்..." என்று ஆரம்பித்தார். உடனே ஆதிமூலம் அவரை இடைமறித்து "நீங்க சும்மா இருங்கோ, சார். இதிலேவேறொரு முக்கியமான விஷயம் மாட்டிக்கிட்டிருக்கு..." என்று கூறிவிட்டு மறுபடியும் ஆறுமுகத்தின் பக்கம் திரும்பி "டேய், நான் கேட்டதற்கு பதில் சொல்லுடா!" என்றார்.

ஆறுமுகத்திற்கு இன்னும் பயம் அதிகமாகியது. இருந்தாலும் அவன் எந்தவிதமான மாறுதலையும் சமாளித்தாகவேண்டுமே! ஆகவே கம்மிய குரலில் பதில் சொல்லஆரம்பித்தான்.

"நீங்க சொல்கிற மாதிரி 'சங்கம்' எதுவுமே எனக்குத் தெரியாதுங்களே!" என்று இழுத்தான்.

"தெரியாதா........என்னடா அடிக்கு பயந்துகிட்டு உளர்றே!

பொய் சொன்ன...... ஆமாம் ...... ஞாபகம் வைத்துக்கொள்......... சரி, அது கிடக்கட்டும். அந்த லேபர் லீடரை உனக்கு எத்தனை நாளாய் தெரியும்?"

"லேபரா.........!"

"ஆமாண்டா, அந்த நல்லமுத்துவை"

"நல்லமுத்துங்களா! நேற்று தானுங்க, பார்த்தேன். இன்னும் சரியாகக்கூடப் பழகலிங்களே!"

"டேய், அதுக்குள்ளேயே பொய் சொல்றியே! உங்க கட்சியிலே இந்த மாதிரி கொலைசெய்ய உதவி செய்றதுக்கு உனக்கு எவ்வளவுடா பணம் தருகிறார்கள்?"

"ஐயோ! பணங்களா......கொலை செய்ய உதவியா......எனக்கு ஒன்றுமே விளங்கலிங்களே!"

"விளங்கலேயா! எப்படி விளங்கும்? இதோ இந்தக் கட்டு புத்தகங்களைப் பார்! இப்பொழுதாவது விளங்குதா, பார்!" என்று கூறி ஐந்தாறு புத்தகங்களைத் தூக்கி மேஜைமேல் போட்டார், இன்ஸ்பெக்டர் ஆதிமூலம்.

பாஸ்கர் துள்ளி எழுந்தார். புஷ்பா திடுக்கிட்டு ஆறுமுகத்தைப் பார்த்தாள்.

ஆறுமுகமும் பயத்தோடு மேஜையருகில் போய் புத்தகங்களை எடுத்துப் பார்த்தான்.

"என்னடா, முழிக்கிறே! இந்தப் புத்தகங்கள் யார் வீட்டிலே இருந்தது, தெரியுமா?" என்று வெற்றிப் பார்வையோடு கூறினார் ஆதிமூலம்.

"இந்தப் பயல் கூட அவனுங்க ஆள்தானா?" என்று ஆத்திரத்தோடு கூறியவண்ணம் ஆறுமுகத்தை வெறுப்போடு பார்த்தார், பாஸ்கர்.

இந்த புத்தகங்களுக்கும் உத்தமநாதபிள்ளையின் மறைவுக்கும் என்ன சம்பந்தம்? இந்தப் புத்தகங்களைத் தன் வீட்டிலிருந்துதானே எடுத்து வந்திருக்கின்றனர்? அப்படியானால் போலீஸ் தன் குடிசையின்மீது படையெடுத்ததா? எப்படியிருந்தாலும் அந்தப் புத்தகங்களை அவனுக்குக் கொடுத்தது நல்லமுத்துதானே! அதுவும் அவன் கொடுத்தான் என்பதற்குத்தான் புஷ்பாவின் சாட்சியம் இருக்கிறதே!

ஆகவே தைரியமாகத் தலையை நிமிர்த்தி, "இந்தப் புத்தகங்கள் நல்லமுத்து கொடுத்தவை, சார்!" என்று அழுத்தமாகக் கூறினான்.

இன்ஸ்பெக்டர் ஆதிமூலம் அப்படியே பிரமித்துவிட்டார். இவ்வளவு சீக்கிரம் ஆறுமுகம் ஒத்துக்கொள்வானென்று அவர் எண்ணவில்லை.

"அப்படிச் சொல்லு! அந்தப் புரட்சிப் பசங்களோடு உனக்கு எத்தனை நாளா தொடர்புடா?"

"தொடர்பா...என்ன சார் மறுபடியும் அதே கேள்வியை கேட்கிறீர்களே! நேற்றுதான் நல்லமுத்துவையே எனக்குத் தெரியும். இதோ எங்க சின்ன எஜமானியை வேணுமுன்னா கேட்டுக் கொள்ளுங்கோ. நல்லமுத்து, அவராக என்பையில் இந்த பிரசுரங்களைத் திணித்தார், நான் இன்னும் அதைப் பிரித்துக் கூடப் பார்க்கவில்லை. பிரித்தாலும் எனக்கு ஒன்றும் விளங்காது!"

ஆதிமூலம் அவனைக் குறுக்கே நிறுத்தி கேள்வி கேட்கப் போனார். கலங்கிய கண்களோடு உட்கார்ந்திருந்த புஷ்பா அதற்குள், "இன்ஸ்பெக்டர் சார்! நீங்க சும்மா ஏன் ஆறுமுகத்தைத் தொந்தரவு செய்கிறீங்க. அவன்பாவம் ஏதுமறியான். எல்லாம் அந்த நல்லமுத்து செய்த வேலைதான். இந்தபிரசுரங்களை அவன்தான் ஆறுமுகத்திடம் கொடுத்தான், நான் பார்த்துக் கொண்டுதானிருந்தேன். ஆனால் அப்பொழுதெல்லாம் அவர்கள் இந்தளவு கொடுமையானவர்கள் என்று என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை ......!" என்றாள். ஆதிமூலத்திற்கு அதற்குமேல் ஏதும் பேசமுடியவில்லை.

"அப்படியானால் ஆறுமுகத்திற்கும் அந்தப் புரட்சி பேசும் அறிவிலிகளுக்கும் சம்மந்தமே இருக்காது என்று எண்ணுகிறீர்களா...?"

"சம்பந்தமே இருக்க முடியாது சார்! ஆறுமுகம் ஒரு அப்பாவி! அவனைக்கெடுத்து அவன் வாழ்வை சந்தியிலே இழுத்துவைத்துவிட்டு யாருமறியாமல் மறைவர் இந்த புரட்சி முழக்கம் செய்யும் புண்ணியவான்கள்.

"மக்கள் உரிமை! மக்கள் அரசு! பாட்டாளிவாழ்க! முதலாளிவீழ்க!" இப்படியெல்லாம் ஆறுமுகத்தின் இனத்தினுடைய நெஞ்சைத் தொடும் வார்த்தைகளை வீசி உணர்ச்சி வயப்பட்ட அவர்களை மனிதத்தன்மையையே இழக்கச் செய்து மாபாதகங்களைச் செய்யச் சொல்வர் இந்தப் புரட்சிமொழி பேசும்வீரர்கள், சார்! அவர்களையும் அவர்கள் ஏமாற்றும் மக்களையும் எனக்கு நன்றாகத் தெரியும் சார்! ஆகவேதான் கூறுகிறேன், ஆறுமுகத்திற்கும் இந்தத் துக்ககரமான சம்பவத்திற்கும் யாதொரு சம்மந்தமும் இருக்க முடியாதென்று! ஆறுமுகத்தை நோக்கி வந்துகொண்டிருந்த பேராபத்திலிருந்து அவனைத் தப்புவித்தாள் புஷ்பா.

இன்ஸ்பெக்டருக்குச் சந்தேகம் தீரவில்லை. இருந்தாலும் ஆறுமுகத்திற்கு. தந்தையையிழந்தபுஷ்பாவே சாட்சி சொல்லும் பொழுது வேறு என்ன செய்யமுடியும்?

"அப்படியானால் சரி, சார். நான் வருகிறேன். கேஸ் மிகவும்சிக்கலாகி விட்டது......" என்று கூறிக்கொண்டே எழுந்தார். பாஸ்கரும் புஷ்பாவும் கூடவே எழுந்தனர்.

ஆறுமுகம் "சிக்கல் என்ன?" என்று ஆவலோடு இன்ஸ்பெக்டரின் முகத்தைப் பார்த்தான்.

ஆதிமூலமும் பாஸ்கரைப் பார்த்தவண்ணமே "நல்லமுத்து 'அப்ரூவ்' பண்ணிடுவான்போலிருக்கு! அப்படிச் செய்துவிட்டால், அப்புறம் உண்மையான குற்றவாளியார் என்பதைக் கண்டுபிடித்தாகணும்!" என்றார்.

இதைக் கேட்டவுடனேயே பாஸ்கரும் புஷ்பாவும் ஏககாலத்தில் துள்ளிக் குதித்தனர்.

"அப்ரூவா.........!" என்று இருவர் வாயிலிருந்தும் வார்த்தை உதிர்ந்தது.

ஆறுமுகத்திற்கு 'அப்ரூவ்' என்றால் விளங்கவில்லை. ஆனால் நல்லமுத்து தப்பித்துக்கொள்ள வழி தேடிவிட்டான் என்பது மாத்திரம் விளங்கியது. அதைவிட அவனுக்கு பயம் தரக்கூடிய சேதி வேறு எதுவாக இருக்க முடியும்! அவனுடைய பயத்திற்கு நல்ல விளக்கமாக, அடுத்துப் பேசிய புஷ்பா கூறினாள்.

(தொடரும்)

திராவிடநாடு

காஞ்சி] 15—8—54 [ஞாயிறு

காஞ்சி அழைக்கிறது!

"கூறுவேன், கேளீர்! அதோ அந்த வண்ணமாடத்தில்தான், அணி தேர்ப்புரவி ஆட்பெரும் படையுடன், அன்றோர் நாள் பல்லவன் வீற்றிருந்தான்; இதோ, இந்த ஏழடுக்கு அரண்மனையில்தான் இளைப்பாறினன் சோழன் குலோத்துங்கன்; மாமல்லபுரத்துச் சிற்பங்களைச் செய்த சிற்பி, இந்தத் தெருவில் இருந்தவராம்" என்று, மக்களுக்கெல்லாம், காட்டிட இயலாது, எம்மால்! மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் இருந்த இடங்கள் மண்திட்டுகளாகிவிட்டன, அந்தமான வாழ்க்கை நடாத்திய சோழ நாட்டினர் இன்று சோற்றுக்கலைவதுபோல! 'காஞ்சி காமாட்சியே, எமது காமாட்சி அம்மன் மாட்சியே' என்று கூறிட அல்ல. வீர முழக்கம் செய்ய—வீரர்காள்!—வருக, வருக என்று, அழைக்கிறோம்.

நகரேழு காஞ்சி என்பர்! பூலோக சுவர்க்கம் என்பர்!—அவ்வளவு ஆலயங்கள் உண்டு இங்கே; பண்டிதர்கள் விளையாடும் பல சத்திரங்களும் உண்டு. பெருங்கோயில்கள் இரண்டுண்டு; பேதங்களும் நிறைய உண்டு. காஞ்சி காமாட்சி கோயிலுண்டு! கால் வயிற்றுக் கஞ்சிக்கு அலையும் காமாட்சிகளும் நிறைய உண்டு! வரதன் இருக்கிறார், வைரங்களும் பீதாம்பரங்களும், அணிந்தபடி—கோயிலில். குடிசைகளில், அவர் பெயர்கொண்ட நடமாடும் வரதர்கள், நாள்தோறும் நலிந்துகொண்டிருக்கும் காட்சிகளும் நிறைய உண்டு! சனாதனி ஊர்தான்; திராவிடத்திலுள்ள பல ஊர்களில் ஒன்றுதான்.

எனவே, அதிசயத்தைக் காட்டிடவோ, ஆண்டவனுக்கும் மனிதனுக்குமிடையே தொடர்புண்டாக்கவோ அல்ல, உங்களை அழைப்பது. ஆண்டவன் சேவைக்கு அல்ல! மனித சேவைக்கு! இந்த வழி சிவகாஞ்சி சென்று, அங்கே போனால் ஏகாம்பரேஸ்வரரைக் காணலாம். அவரைத் துதித்தால் கைலாசபதவி கிடைக்கும்; இப்படிப்போனால், விஷ்ணு காஞ்சியைச் சேரலாம், வரதர் இருக்கிறார். அவரைப் போற்றிடின் வைகுந்தவாசம் நிச்சயம் என்று பாதை காட்ட அல்ல—மனிதவாதை தீர்க்கும் வழி காண, உங்களையெல்லாம் அழைக்கிறோம்.

ஆண்டவர்களின் கோயிலை நாடி, ஆயிரமாயிரம் மைல்களுக்கப்பாலிருந்தெல்லாம், பக்தர்கள் வருகிறார்கள், இங்கே—விதவிதமான வாகனங்களில்! விசித்திரமான ஆடம்பரங்களுடன்!! அவர்கள் தேவை, குருக்களுக்கு. அத்தகையோரை அல்ல அன்னக்காவடிகளே! உழைத்தும் வாழமுடியாது தவிக்கும் உத்தமர்களே! உதிரம் சிந்தப்பாடுபட்டும் அன்னம் காணமுடியாதேங்கும் ஏழைகளே, இருகையேந்தி அழைக்கிறோம்! காஞ்சிக்கு வருக, வருக, என்று அன்பழைப்பு விடுகிறோம்!

ஆகஸ்டு 21, 22 தேதிகளில் காஞ்சிமாநகரில், திராவிடமுன்னேற்றக் கழக இருபெரும் மாநாடுகள் நடைபெறப்போகின்றன. அந்த மாநாடுகளில் கலந்து கொள்ளவே, தாயகத்து மக்களே, அன்போடு அழைக்கிறோம்—அப்பமோடு அவல் பொரி வழங்க அல்ல! அம்மையப்பன் அருளைப்பெறும் மார்க்கத்தைக் காண அல்ல! நாம் வாழ—நாடு வாழ—பல திட்டங்களைத் தீட்டிட. ஏற்கனவே கொண்டிருக்கும் இலட்சியங்களை எல்லோருக்கும் விளக்கிட. மண்மேடாகிப்போன இடங்களைக் காட்டிட. அவைகள் அழிந்துபோன தன் வரலாற்றை விளக்கிட. பருத்தியிருந்தால் போதும், அதனைக் கொண்டு பஞ்சவர்ணத்தில், பளபளக்கும் சேலைகளைச் செய்துதரமுடியும்—என்று செப்பும் ஆயிரமாயிரம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள், இங்கே! அவர்கள் வாழ்வோ, சிலந்திக்கூடு, இன்று!! ஆண்டு மாண்ட மன்னாதி மன்னர்கள் காலத்திலே மண்புகழும் அளவுக்குப்பேர்பெற்ற உழைப்பாளர் பரம்பரை உண்டு இங்கே—அவர்கள் ஒடிந்த உள்ளத்துடன், மடிந்துபோகும் நிலையில், போராடிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப்புனிதர்களின் வாழ்க்கையைக் காண்பீர்! நசிப்பதன் காரணம் அறிவீர்! பசிக்கவும் அலைவதோ, இப்பூமியில்? பொறுப்பதோ, நாய்!—என்ற கேள்விகளை எழுப்பி, அதற்கான விடைகளைத் தீட்டிட, வீரமரபினரே! வருக, வருக, என்று அழைக்கின்றோம், காஞ்சிக்கு.

'அலைகள் அலறவும், மலைகள் மருளவும், இந்த மண்டலமே கதிகலங்குமளவுக்குப் பேர்பெற்ற வீராதி வீரர்கள்! தீராதி தீரர்கள்! தென்னாட்டுச் சிங்கங்கள்! நாங்கள் இருக்கும்போது; எங்கள் கைகளிலே கட்கமும் உள்ளத்திலே நீங்கள் உண்டாக்கிய தியாகஜோதியும்சுடர் விட்டெரியும் போது—மன்னா! எதற்கு யோசிக்கிறீர்கள். உங்கள் விரல் அசைந்தால் போதும், விரோதிகளைச் சுடுகாட்டுக்கனுப்புகிறோம்! என்று சூளுரைத்து, களம்கண்ட வீரர்களின் பூமி, இன்று வெந்ததைத் தின்று கண்டதைப் பேசும் வீணர்களின் கூடாரமானதேன்? வாழ்ந்தோர் வீழ்ந்ததேன்? கோபுரம் குப்பைமேடானதேன்? புலி, எலியானதேன்? என்ற கேள்விகளைக் கேட்டு, கார்முகிலைக் கிழித்துவந்த வெண்ணிலாபோல், உதயமாயிற்று அறிவு இயக்கம்! ஆண்டுகள் முப்பதாகப்போகின்றன, அது முளைத்து! இந்த முப்பது ஆண்டுப் பயணத்திலே, அது தாங்கிய சங்கடங்கள் பல உண்டு; அடைந்த வெற்றிகளும் பல உண்டு. பெற்ற கல்லடிகள் ஏராளம்; அதுபோல் பெற்ற பரிசுகளும் பல. தாழ்ந்தோர் மொழியென தகாதவர்களால் ஏசப்பட்ட, தமிழ்மொழி, இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது! தாழ்ந்த இனமென தருக்கர்களால் இகழ்ந்துரைக்கப்பட்ட, பழங்குடி மக்கள், ஒளிபெற்ற கண்களுடன், சிங்க ஏறுகளாய் சீர்திருத்த முழக்கம் செய்கின்றனர். அதன் எதிரொலி, எங்கும் இன்று! எழுத்திலும் பேச்சிலும், நாடகத்திலும், அதன் மறுமலர்ச்சியைக் காண்கிறோம்! அதற்காகப் பணிபுரி

யும் படைவரிசை—பலரகம். அவர்களிலே ஒருவரான கலைவாணர்—நகைச்சுவை மன்னர் என். எஸ். கிருஷ்ணன், காஞ்சி சீர்திருத்த மாநாட்டிற்குத் தலைமைவகிக்கிறார். நடிகச் செல்வர், எம். ஜி. ராமச்சந்திரன் துவக்கிவைக்கிறார். நடிகர்களா? நாடாளும் பிரச்சனையில் அவர்களா?—என்று, விழிபெருக்கப் பேசுவோருண்டு, வியப்பால் உள்ளம் சுருங்கி, வேதனை ஈட்டிகளை வீசுவோருண்டு. அந்த வெற்றுரைகளுக்கு நேரத்தையும்காலத்தையும் வீணாக்குபவர்களல்ல, நாம்! வேலை நிறைய இருக்கிறது—அதன் அளவும் பெரிதெனத் தெரிகிறது—அப்பணி பெருக, அனைவரின் ஒத்துழைப்பையும், நாடிடும் நன்மதியாளர்களே—உங்களையெல்லாம், அழைக்கிறது, செங்கற்பட்டு மாவட்டம்.

இரண்டாம் நாள் நடைபெறும் தி. மு. க. அரசியல் மாநாட்டிலே, தூத்துக்குடி தோழர், சதிவழக்கில் ஈடுபட்டிருக்கும் நண்பர்களில் ஒருவர் இரா. சு. தங்கப்பழம் தலைமை வகிக்கிறார். கல்லக்குடி அறப்போராட்ட உழைப்பாளர், திருச்சி நகரச் செயலாளர் M. S. மணி துவக்கிவைக்கிறார். தொண்டர்களின் கூடாரம்!—என்று மாற்றாரும், உற்றாரும், மகிழ்ந்துரைக்கும் மாட்சிமைக்கு தக்கதோர், சாட்சி இது. பண பலமும், ஆள்பலமும் காட்டி, அந்தஸ்து பெருமையை முன் கூட்டியே அறிவித்து, அரசியல் வாழ்விலே ஏற்றம் பெற்ற மகிபர்களின் மடியிலே கிடந்த கட்சி, காட்டுக்கும் மேட்டுக்கும், குடிசைக்கும் வீதிக்கும், அழைத்துவரப்பட்டுவிட்டது என்பதை அறிவிக்கும் சின்னம், இது! அரசியல் வாழ்வு, மக்களுக்காக அல்ல—தலைவர்களுக்காக, என்றோர் தகுதியற்ற நிலை, தமிழ்ச்சோலையின் பரம்பரைக் கதை. அந்தக் கதையை மாற்றி, புது வழி கண்டது, தி. மு. க. புதியதோர் ஜனநாயக முரசைத் தட்டியது! சென்னையிலிருந்து சியான் உத்தரவிட, சில பலர், புறப்பட்டு ஊர்தோறும் செல்ல, அவரைப்பார்த்தேன் இவரைப்பார்த்தேன், அங்கு இவ்வளவு பலம் இங்கு அவ்வளவு பலம் என்று, 'கன்னிமாரா'வில் கூடி கட்சி நடத்திய காலமல்ல, இது! கட்சிகள், ஆலமரத்தடியிலும், அன்றாடங்காய்ச்சிகளின் குடிசைகளுக்குள்ளும் உருப்பெற ஆரம்பித்துவிட்டன!! அந்த உத்தமக் காட்சியைக் காண, ஏங்கிய வாலிபர்கள் பலர்—தூங்காத வீரர்கள் ஏராளம்—பணிபுரிந்த படைவரிசை பெரிது. அந்த உழைப்பிலே உருவான திராவிட முன்னேற்றக்கழகம், உங்களையெல்லாம், அழைக்கிறது—வருக, வருக, என்று.

அழைப்பிலே, அன்பும் பண்பும் இருக்கிறது; ஆகாயத்தைக் காட்டி, 'வந்தால் மோட்சம், வராவிடில் நரகம்' எனும் வீண்மிரட்டல் இல்லை. ஆசையோடு அழைக்கிறது, உங்களை! கழகத் தோழர்களை அழைக்கிறது, தன்னுடைய திட்டங்களை அறிந்து செல்லுமாறு. வாலிபர்களை அழைக்கிறது, நமது வாழ்நாளில் ஒரு இன்பக் குடியரசை நிறுவலாம் வாரீர்—எனும் ஆசையோடு. மாணவர்களை அழைக்கிறது, ஏட்டில் காண்பவைகளை நாட்டில் நடைபெறச்செய்வோம், என்ற நல்லாசையோடு. விவசாயிகள், தொழிலாளர்கள், எல்லோரையும் அழைக்கிறது—செங்கற்பட்டு மாவட்டம்.

இரண்டு நாட்களிலும் காஞ்சியில் நடைபெறப்போகும் மாநாடுகளிலே கழகத்தின் எல்லாத் தோழர்களும் கலந்துகொள்ளப்போகிறார்கள்! பற்பல பிரச்னைகளைப்பற்றி பலரும் விளக்கிடப்போகிறார்கள்!! அடிபட்ட புலிபோல், ஆர்ப்பரிக்கும் ஆதிபத்யங்கள், அலறிக்கொண்டிருக்கின்றன—உலகில். விடேன் கொடேன்!-என்று வீண் பிடிவாதம் செய்துகொண்டிருந்த பிரஞ்சு ஆதிக்கம், இதோ! அதோ! என்று மூட்டைகட்டிக்கொண்டிருக்கிறது, புதுவையிலும் காரையிலும். போர்த்துகீசிய ஏகாதிபத்யமும் கோவாவில் நடைபெற்றுவரும் குமுறலைக்கொண்டு, கிலிகொண்டிருக்கிறது. இரத்தம் சிந்திப் போராடிய இந்தோசீன விடுதலை வீரர்கள், அமைதியோடு தமக்கென ஓர் ஆட்சியை நிறுவிவிட்டனர்! அந்தப் பிரச்னை தீர்க்கப்பட்டதைக் கண்டு, அமெரிக்கா அஞ்சுகிறது! இத்தகைய சூழ்நிலை, உலகெங்கும். ஒரு பக்கம் விடுதலை வேட்கை! மற்றோர் பக்கம் அதனையடக்கும் ஆதிக்க வெறி!!—இந்த நிலைமை ஆங்காங்கு. உள்நாட்டிலோ, அன்பர் காமராஜர் குடியாத்தம் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறார்! அவருடைய எதிர்காலத் திட்டம் என்ன என்பதும், அதுபற்றி நாம் நடந்துகொள்ள வேண்டிய வகைகளையும் யோசிக்க வேண்டியவர்களாயுள்ளோம். திருவாங்கூர் பகுதியில், தாயகத்துத் தோழர்கள், உரிமை கோரி, சிறை சென்று வந்தனர்! கடைசியாகக் கிடைத்த தகவலின்படி, நான்கு உயிர்களைத் துப்பாக்கிக்குண்டுகள், காவுகொண்டுவிட்டதாகச் செய்தி—திடுக்கிடவைக்கிறது, நம்மை.

இந்தச் சிக்கலான நேரத்தில், தி. மு. க. தோழர்காள், நல்லதோர் முடிவெடுக்க உங்களையெல்லாம் அழைக்கிறது, காஞ்சி! இருகையேந்தி, அழைக்கிறது! அன்புததும்பும் உள்ளத்தோடு, அனைவரையும் அழைக்கிறது! ஆருயிர்ச் சகோதரர்காள், அழகுத் திராவிடத்தின் ஆற்றல்மிக்க இளைஞர்காள் உழைத்து உலரும் உத்தமப் பாட்டாளிகளே, தாய்மார்களே, மாணவ மாணவிகளே, செங்கற்பட்டு மாவட்டம் அழைக்கிறது உங்களை! அதன் அழைப்பை ஏற்று, காஞ்சிக்கு வருமாறு, திராவிடமெங்குமுள்ள தீரர்களையும் வீரர்களையும் அழைக்கின்றோம்! வருக—வருக—மாநாட்டின் இருநாட்களிலும் முழங்கப்போகும் கருத்துக்களைக் கேட்டிட வருக. இரண்டு இரவுகளிலும் நமது நடிகமணிகளாம் எஸ். எஸ். ராஜேந்திரன் டி. வி. நாராயணசாமி குழுவினர் நடத்தும் 'சந்திரமோகன்', 'அம்மையப்பன்' நாடக விருந்துகளும் உண்டு. அந்தச் சுவையும் பெறலாம்! அறிவுப்பாதையும் காணலாம்!! ஆகவே, தவறாது வருக, என்று தாயகத்துச் சோதரர்களை, மாவட்டக் கழகத்தவரைப் போல் நாமும் அழைக்கிறோம். வருக! வருக!!

*

மக்கள் நலஆட்சி

இருதயராஜ் M.A.

3

அரசாங்கமே வேலை தேடித்தரும் நிலையங்களை ஏற்படுத்தி எல்லோருக்கும் வேலை கிடைக்க உதவி செய்கிறது, அதனால் அநேகமாக 6 மாத காலத்தில் வேலையிழந்தவனுக்கு மறுபடியும் வேலை கிடைத்து விடுகிறது.

ஒருவன் வியாதியாக இருக்கும்போது அவன் சாதாரணமாகச் சம்பாதிக்கும் வருமானமே போதாது— மருத்துவ செலவுகள் கூடுவதால், மருந்து வாங்கவேண்டும், ஊசி போட்டுக் கொள்ளவேண்டும், பிரத்தியேக உணவுகள் சாப்பிட வேண்டும். ஆனால், இந்தச் சமயத்தில் தான் அவன் வழக்கமான வருமானமும் நின்று விடுகிறது. அதனால் பிரிட்டனில் வருமானமில்லாதவருக்குக் கொடுப்பது போல் வாரத்துக்கு 20 ரூபாயும் அத்துடன் வேண்டிய மருத்துவ வசதிகள் அத்தனையும் இலவசமாகச்செய்து தரப்படுகிறது.

மக்கள் நல ஆட்சியில், பிள்ளைகளுக்காக அரசாங்கம் மிகவும் சிரத்தை எடுத்துக்கொள்ளும். ஒரு குறிப்பிட்ட வயதுவரை பிள்ளைகள் எல்லோரும் பள்ளிக்குச் செல்ல வேண்டும். அரசாங்கத்தால் நடத்தப்படும் பள்ளிகளில் எல்லோருக்கும் இலவசமாகக் கல்வி புகட்டப்படும்.

வியாதி, வேலையில்லாத குறை, இவைகளுக்குத் தரப்படும் உதவியைத் தவிர, அதிக பிள்ளைகள் எண்ணிக்கையுடைய குடும்பங்களுக்கு, அவை ஏழையாயிருந்தால்—அநேகமாய் ஏழைக் குடும்பங்களே பாரிக் குடும்பமாக இருக்கும்—பிள்ளைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து உதவி தரப்படும்.

பிரிட்டனில் உதாரணமாக முதற் குழந்தைக்குப் பிறகு பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் குறைந்தது வாரத்துக்கு 4 ரூபாய் கொடுக்கப்படுகிறது.

இம்மாதிரி உதவிகள் பிரிட்டனில் மட்டுமல்ல, நியூஜீலந்து ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலும், தரப்படுகின்றன. அங்கெல்லாம் மக்கள் நல ஆட்சி நடைபெறுகிறது.

*

இவ்விதம் ஒரு அரசாங்கம் நாட்டில் எல்லோரும் இன்புற்றிருக்கும் வகையில், இல்லை என்ற ஏக்கம் எவருக்குமின்றி, எல்லோருக்கும் எல்லாவிதமான பாதுகாப்பும் அளித்து ஆட்சி புரிவதானால் அதற்குத்தேவையாகும் ஏராளமான பணம் எங்கிருந்து அரசாங்கத்துக்கு கிடைக்கும்?

வரி விதிப்பதன் மூலம் அல்லது புதிய காகித நோட்டுகள் அச்சடித்து விநியோகிப்பதன் மூலம் அரசாங்கம் தேவையான பணத்தைப் பெறலாம்.

புதிய நோட்டுகள் அச்சடித்து விநியோகிப்பது சுலபமான வழி. ஆனால், மக்கள் நல ஆட்சியில் அரசாங்கத்துக்கு ஏராளமான பணம் தேவைப்படும். அவ்வளவையும் புதிதாக அச்சடித்த நோட்டுகளைக் கொண்டு சரிப்படுத்தினால், அதன் விளைவாக நாட்டில் பண வீக்கம் ஏற்படும்! அதாவது, நாட்டில் ஏற்கனவே உள்ள பணத்தோடு இந்தப் புதிய நோட்டுகளும் சேர்ந்து பணப் பெருக்கம் ஏற்படும். மக்களிடம் கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். விலைவாசிகள் விஷம்போல் ஏறிவிடும். அதனால், மக்கள் எல்லோருமே கஷ்டப்படுவார்கள்.

வரி விதிப்பதன் மூலம் எவ்வாறு பணம் திரட்டுவது? ஒன்று பணக்காரர்களிடமிருந்து வரியைத் தண்டி அதைக்கொண்டு மற்றவருக்கெல்லாம் உதவிசெய்யலாம். ஆனால், இந்த வழியைமட்டுமே அரசாங்கம் கையாண்டால், பணக்காரர்களும் வரிகொடுத்தே ஏழைகளாகிப் பிறகு அவர்களையும் காப்பாற்ற அரசாங்கம் ஏதாவது செய்யவேண்டி வரும். அதனால் பணக்காரர்களின்மேல் வரி விதிப்பது, அதிகமாக இருக்கலாமே தவிர, அபரிமிதமாக இருக்கக்கூடாது.

பணக்காரர்களிடமிருந்து வசூலித்து ஏழைகளுக்காகவும், முதலாளிகளிடமிருந்து வசூலித்து தொழிலாளிகளுக்காகவும், நிலபுலக்காரர்களிடமிருந்து வசூலித்து விவசாயிகளுக்காகவும் செலவிடுவதைவிட, ஒரே அந்தஸ்திலிருப்பவர்களில் சிலரிடமிருந்து வசூலித்து மற்றவர்களுக்காகச் செலவிடுவது நல்ல முறையாகும். உதாரணமாக, தேகாரோக்கியமாயிருப்பவர்களிடமிருந்து வசூலித்து நோய்வாய்ப்பட்டவர்களுக்கும், வேலையிலிருந்து சம்பாதிப்பவர்களிடமிருந்து வசூலித்து வேலையில்லாதவர்களுக்கும், இளம் வயதுடையவர்களிடமிருந்து வசூலித்து வயோதிகர்களுக்கும் செலவிடுவது ஒரு முறை. இது சிலாக்கியமானதுங்கூட. தேகாரோக்கியமுள்ளவர்களும், வேலை செய்ய சக்தியுடையவர்களும் நோயாளிகள், வேலையில்லாதவர்கள் தள்ளாத வயதினர் இவர்களைவிட உண்மையிலேயே அதிர்ஷ்டசாலிகள். நல்ல நிலையிலுள்ளவர்கள் தங்களைவிட நிர்ப்பாக்கிய நிலையில் உள்ளவர்களுக்கு உதவிசெய்வது, நியாயம்மட்டுமல்ல, கடமையுங்கூட.

இதை எப்படி நடைமுறையில் கொண்டுவருவது? நாட்டில் உள்ள அத்தனை பிரஜைகளின் மேலும்,

அவர்கள் வருமானத்தைப்பற்றிக் கவலையின்றி, ஏழை பணக்காரர் என்ற வித்தியாசமின்றி, ஒரே தொகையான ஒரு வரியை விதித்து, அந்த வரித்தொகையை முழுவதும் இலவச வைத்திய வசதிகள் செய்து தரச் செலவிட்டால், நோய் வாய்ப்பட்டவர்கள் அதனால் பெரும் பயனடைவார்கள். ஆக நோயில் விழாதவர்களின் பணத்தைக்கொண்டு நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்வதாக ஏற்படும்.

பிள்ளைகளைப் படிக்க வைப்பது எல்லாப் பெற்றோர்களின் கடமை—அவர்கள் வருமானம் எதுவாயினும், அவர்கள் பிள்ளைகளின் எண்ணிக்கை எதுவாயினும், அரசாங்கம் எல்லாப்பெற்றோர்களின்மீதும்ஒரே தொகையான வரியை, ஏற்றத்தாழ்வின்றி விதித்து அதன் மூலம் வரும் வருமானத்தைக்கொண்டு அரசாங்கம் இலவசப் பள்ளிக்கூடங்கள் நடத்துகிறது என்றால், குறைந்த எண்ணிக்கைப் பிள்ளைகளையுடையவர்கள் அதிக எண்ணிக்கைப் பிள்ளைகளையுடையவர்களுக்கு உதவி செய்தது போலாகும்.

இப்படி ஒரே மாதிரியான வரியை வருமானத்தைக் கணக்கிடாமல், எல்லோரிடமிருந்தும் வசூலித்து அதைக்கொண்டு இல்லாதவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்துதருவது "எல்லோரிடமிருந்தும் சமத்துவமாக வசூலித்து ஒவ்வொருவருக்கும் அவனவன் தேவைக்குத்தக்கபடி கொடுப்பது" என்ற முறைப்படியாகும். அதைவிட்டு, பணக்காரர்களிடமிருந்து மட்டும் பணத்தை வசூலித்து அதை ஏழைகளுக்காகச் செலவிடுவது "ஒவ்வொருவரிடமிருந்து அவனவன் சக்திக்குத்தக்கபடி வசூலித்து ஒவ்வொருவருக்கும் அவனவன் தேவைக்குத் தக்கபடி" கொடுப்பது என்ற முறைப்படி ஆகும்.

இந்த இரண்டு முறைகளில் எது நல்லது என்று பார்ப்பதைவிட இரண்டையும் கலந்து உபயோகித்து வெற்றி காணுவதுதான் சிறந்த வழி. அப்படித்தான் பிரிட்டனில் செய்கிறார்கள்.

பிரிட்டனில் வேலையிலிருக்கும் ஒவ்வொருவரும் தேசிய இன்சூரன்ஸ் திட்டத்தில் சேர்ந்து அவரவருடைய வருமானம் எதுவாயிருந்தாலும், ஒரே விதமான வரியைக் கட்டி வருகிறார்கள். இப்படி வரி கட்டுகிறவர்கள் நோயிருக்கும்போது இலவச மருந்து வசதியும் வேலையிழந்தபோது பண உதவியும், வயது முதிர்ந்தும் உபகாரச் சம்பளமும் பெறுவதற்கு தகுதியுடையவராகிறார்கள்.

அரசாங்கத்துக்கு வசூலிக்கச்சிரமமின்றி அதிக வருவாய்கொண்டு வருகிற விற்பனை வரி, இறக்குமதி சுங்கவரி, சில சாமான்களின்மேல் தனி வரி முதலியவைகளைக்கொண்டு மட்டும் ஏழைகளின் நலன்களை அதிகரிக்க நினைப்பது சரியல்ல. ஏனெனில் இந்த வரிகள் அதிக வருமானமுள்ளதாக இருந்தாலும் அவைகள் பெரும்பாலும் ஏழைகளிடமிருந்தே வசூலிக்கப்படுகின்றன. ஆதலால் இந்த வரி வருமானத்தைக் கொண்டே சமூக நலன்கள் அபிவிருத்தி செலவுகள் செய்வது, ஏழைகளிடமிருந்தே பிடுங்கி அவர்களுக்கே தானம் செய்யும் கேலிக்கூத்தாக முடியும்.

1939-ம் ஆண்டுக்குமுன் பிரிட்டனில், தொழிலாளர் என்னென்ன வசதிகள் இலவசமாக அரசாங்கத்திலிருந்து பெற்றார்களோ, அந்த அளவுக்கு மறைமுகமான விற்பனை வரி போன்றவைகளின்மூலம் அரசாங்கம் அவர்களிடமிருந்து வசூலித்து வந்தார்கள். பணக்காரர்கள் நடுத்தர வகுப்பினரிடமிருந்து வருமான வரி போன்ற நேரடியான வரிகளின் வருமானத்திலிருந்து வெளிநாட்டுப் பாதுகாப்பு, அரசாங்கச் செலவு இவைகளைப் பார்த்துக்கொண்டு, தொழிலாளர்களிடமிருந்து மறைமுகமான வரிகள் மூலம் வசூலிக்கப்பட்ட பணத்திலிருந்துதான் தொழிலாளருக்கு வேண்டிய வசதிகள் செய்து தரப்பட்டன. ஆனால், அரசாங்கம் அப்பொழுதெல்லாம் அவ்வளவு அதிகமாக இந்தக் காரியத்துக்கு செலவு செய்யாதபடியால், அந்த வரிப்பளு ஏழைகளின்மேல் அதிகமாக இருக்கவில்லை. 1339க்குமுன் பிரிட்டனில் சமூக நலன்களுக்காக, ஆண்டுக்கு ஏறக்குறைய 4500,000,000 ரூபாய் செலவிட்டது. ஆனால், 1945க்குப் பின் அதன் சமூக சேவைச் செலவு 25500,000,000 ரூபாய்க்கு அதிகரித்திருக்கிறது. அதாவது, பிரிட்டனில் வேலை செய்யத் தகுதியுடைய பிரஜைகளைக் கணக்கிடும்போது தலைக்கு 1125 ரூபாய் ஆகிறது. ஒவ்வொரு பிரஜையும் இவ்வளவு பணம் அரசாங்கத்துக்குக் கொடுத்தால்தான், சமூக சேவைக்காக அரசாங்கம் 25500,000,000 ரூபாய் செலவிடமுடியும்.

சாதாரணமாக கீழ்த்தரமான ஒரு தொழிலாளி பிரிட்டனில் ஆண்டுக்கு 3750ரூபாய் சம்பாதிக்கிறான். அரசாங்கத்தின் சமூகசேவைச்செலவுக்காக அதில் 1125 ரூபாய் வரியாக வசூலித்துவிட்டால்—அதாவது ஒவ்வொருவருக்காகவும் செலவிடும் 1125 ரூபாயை ஒவ்வொருவரிடமிருந்தும் வசூலித்துவிட்டால் அவர்களுடைய சம்பளத்தில் 3-ல் ஒரு பங்கு போய்விடும். அவர்கள் அதனால் மிகவும் சிரமப்படுவார்கள். வியாதியாயிருக்கும்போதும் வேலையிழந்தபோதும் அவர்களுக்கு உதவி செய்வதாகச் சொல்லி—அவர்கள் கஷ்டப்படும்போது காப்பாற்றுவதாகக் கூறி—அவர்கள் நல்ல நிலைமையில் இருக்கும்போதே அவர்களைக் கஷ்டப்படுத்துவதாக முடியும்.

அதனால்தான் பிரிட்டனில் மறைமுகமான வரிகளால் சாதாரண மக்களிடமிருந்து ஓரளவுக்கு மட்டும் பணத்தை வசூலித்துக்கொண்டு, பணக்காரர்மேல் வருமான வரி, சொத்துவரி, மரணவரி போன்ற நேரடி வரிகளை முன்னைவிட அதிகமாகச்சுமத்தி, அதிலிருந்து கிடைப்பதையும் சேர்த்து சமூக நல அபிவிருத்திக்காகச் செலவிடுகிறார்கள்.

மக்கள் நல ஆட்சியில் சமூக சேவைக்காகச் செலவிடப்படும் பணத்தைப் பல வழிகளில் பெற முயற்சிக்க வேண்டும். பணக்காரர்களை மட்டுமே நம்பாமலும், மற்றவர்களை அதிகமாகத் துன்புறுத்தாமலும், அதே சமயத்தில் கொடுக்க வசதியுள்ளவரை இலேசாக விட்டுவிடாமலும் அரசாங்கம் வேண்டிய பணத்தைப் பெற வேண்டும்.

(இன்னும் வரும்)

அது அல்லவோ நாடு!

அவர் எவ்வித குற்றமும் செய்யவில்லை; ஆனாலும் விலகிவிட்டார்.

அவரை விலகும்படியும், யாரும், வற்புறுத்தவில்லை—எனினும், இதோ, என் ராஜினாமா', என்று கூறிவிட்டார்!!

வேண்டியவருக்கு 'லைசென்ஸ்'களை வழங்கினீர்—உறவினர்களுக்கு உத்தியோக உயர்வு தந்தீர்—ஊழல் அதிகமாகிவிட்டது உமது இலாகாவில் — இவ்வண்ணம், எதிர்க்கட்சியினர் கூறவில்லை—எனினும், விலகிவிட்டார், அவர்!

ஆயிரக்கணக்கில் சம்பளம் உண்டு—அதைவிடப் பெரிதான கவுரவம் உண்டு—ஆயினும், அவர் ஒரு பொருட்டென மதிக்கவில்லை. சிறு சொல்! ஒரு காகிதம்!! உள்ளே வரும்போது மந்திரியாக இருந்தார்! போகும்போது, சாதாரண பிரஜையாக வெளியேறினர்!!

சிலம்பைக் காட்டிச் சீறிய கண்ணகியைக் கண்ட பாண்டிய மன்னன் பதறித் துடித்து, உயிர் துறந்தானும் — 'யானோ அரசன்?' என்று கூவியவண்ணம். நீதி தவறியதால் நெஞ்சம் வெடித்திறந்த அம்மன்னன், தமிழகத்தில் அரசுமுறை எப்படியிருந்ததென்பதற்கோர், எடுத்துக்காட்டு.

அதுபோல, இவரும், தன் இலாகாபற்றி எழுந்த சிறு பிரச்னையைக்கண்டுமனம்தாளாது, மந்திரிப் பதவியைத்துறந்திருக்கிறார். தவறு, அவருடையதல்ல! விலகவேண்டியவரும், அவரல்ல!! ஆயினும், 'இதோ, என் ராஜினாமா!', என்று கொடுத்து விட்டார்.

மக்கள் சபையில், அவருக்குக் கட்டுப்பட்ட அதிகாரியொருவர் செய்ததவறை, எடுத்துக்காட்டினர், எதிர்க்கட்சியினர். 'அப்படியா? எனக்குத் தெரியாதே! கவனிக்கிறேன்', என்று, பதில் சொல்லவில்லை, அவர். சாதாரணமாக, இங்கே, இப்படித்தான் மந்திரிகள் சொல்லுகிறார்கள்! அவரோ, திகைத்தார்—உடனே, விலகல் கடிதம் அளித்தார். "நான் மந்திரி. எனக்குத் தெரியாமல், மேற்படி தவறு நடந்திருக்கலாம். எனினும், இலாகாவின் தலைவன் நான். இனி, என்னை நம்பியமக்களிடம் எப்படிச் சொல்வது, நான் சார்ந்திருக்கும் கட்சிக்கே அவமானம். எப்படி இத்தவறு, என் கண்ணுக்கு புலப்படாமற் போயிற்று?—என்றே, புரியவில்லை. எனினும், தவறு நடைபெற்றது உண்மையென்று தெரிகிறது. இனியும், நான் பொறுப்பை வகிப்பது, எனது நாட்டுக்கே அவமானம்! ஆதலால், வெளியேறுகிறேன்!!", என்று தெரிவித்துவிட்டார். அவர் பெயர் லிட்டில்டன். பிரிட்டிஷ் அமைச்சர். முற்போக்கு கொள்கை பேசும் கட்சியைச் சேர்ந்தவரல்ல; சர்ச்சிலின் சநா;கன்சர்வேடிவ்கட்சி. எனினும், கண்யம் ததும்புகிறது! பதவியைவிட, அரசின் மானம் பெரிதெனத் துறந்துவிட்டார்!!

அது அல்லவோ, நாடு? அப்படிப்பட்டவர்களையன்றோ, மக்கள் மதிப்பர்! இதோ, ஒருகடிதம்! 'நம்ம' மந்திரிகளைப்பற்றி ருசப்பாளையம் (வ. ஆ) சீராமுலு என்பார் தீட்டியுள்ளார்.

"ஆரணியில் மந்திரி மாணிக்கவேலர் 27–7–54 செவ்வாய்பிற்பகல் 5 மணிக்கு ஆரணிக்கு வருகை தந்தார். சுற்றுப் புறங்களிலிருந்து, அன்பர்கள் திரளாக திரண்டு கனம் மந்திரியாரை முசாபரி பங்களாவில் மாலை சூட்டிவாழ்த்தினர். சில சங்கங்களின் சார்பாக மாலைகள் வழங்கப்பட்டன. பின்னர் 5 30 மணிக்கு முனிசிபாலிட்டியில் வரவேற்புரை வழங்கினர். முடிவுக்குபின்னர் 6 30 க்கு பெண்பாடசாலையில் நிகழ்ந்த கோலாட்டம், கும்மி, டான்ஸ் இவைகளுக்குகனம்விஜயம். மாதர்கள் மத்தியில் மந்திரியார் சொற்பொழிவு! பின்னர் பாங்கியை பார்வையிடல். இரவு 8 மணிக்கு முனிசிபல் சேர்மன் ராவ்சாஹேப் ஸ்ரீனிவாஸ முதலியார் அவர்களால் அறுசுவைஉண்டி அமைச்சருக்கும் அன்பர்களுக்கும் அளிக்கப்பட்டது. இரவு 9 மணிக்கு கனம் மந்திரியார் முசாபரிபங்களா வந்தடைந்தார். அங்கு பல மணிகள்வரை காத்திருந்த ஆரணி நகர காங்கிரஸ் அங்கத்தினர்கள் அமைச்சர் அவர்களுக்கு மாலை சூட்டினர். வரவேற்பிதழ் வாசித்தளிக்கமுயன்ற தருணம் படிக்கவேண்டாம் கேட்க நேரம் இல்லை எனக்கூறிக்கொண்டே 9 30 மணிக்கு கண்ணமங்கலம் புறப்பட்டுவிட்டார்."

இது, நம்ம மந்திரிகள் நிலை! இது ஒரு வகை. இன்னொரு வகையோ கேட்க வேண்டியதில்லை!

பிரிட்டிஷ் அமைச்சர் தன் இலாகா அதிகாரி செய்த குற்றத்துக்காகத் தானே, விலகிக்கொண்டார். ஆனால் காங்கிரஸ் ஆட்சியிலோ மந்திரிகள் மீதே குற்றம் சாட்டப்பட்டு வருகிறது—மைத்துனனை நியமித்தார், நண்பருக்கு உதவிசெய்தார், இவ்வளவு லாபம் சம்பாதித்தார் என்று மூன்போர்முறை, பிரசாசம், பெரிய நோட்டீஸ் போட்டே கொடுத்தார்! என்ன செய்தனர்? ஏசிப் பேசினரேயன்றி, நாற்காலியை விடாப்பிடியாகப் பிடித்தபடி நின்றனர்!

நிர்வாகத்தில் சிறுதவறு—செய்தவர் ஒரு அதிகாரி-எனினும் அமைச்சர் விலகுகிறார்! அதன்மூலம், தன்னையும் நாட்டின் கவுரவத்தையும் உயர்த்திக் கொள்கிறார்!!

இங்கோ, 'க்ஷவரபிளேடு' முதற்கொண்டு லஞ்சம் வாங்கியதாக உயர்தர அதிகாரிகள் கூண்டில் நிற்கின்றனர்–அவர்களின் இலாகாகக்களை அப்போது நிர்வகித்த மாஜி மந்திரிகளும்—இப்போதைய கவர்னர்களும், பொய்சாட்சியம் சொல்லிவிட்டுத் திரும்புகிறார்கள்! ஊழல் நடந்தது, என்பதை, ஒளிவு மறைவின்றி கோர்ட்டில் கூறிவிட்டு, உடனே கவர்னர் நாற்காலியில் போய் உட்கார்ந்து கொள்ளுகிறார்கள்!! நாள்தோறும், ஜீப்கள்மோசடி

—உரபேர மோசடி—ரெடிமேடு வீடு மோசடி— என்று கூடைகூடையாக செய்திகள் வருகின்றன! கொஞ்சமும் அதைப்பற்றி சஞ்சலப்படுவதில்லை, நமது மந்திரிகள்.

நேருபண்டிதரோ, 'இதெல்லாம் சகஜமே! நாம் இப்போதுதானே ஆளக்கற்றுக் கொள்கிறோம்!!', என்று ஆண்டு ஏழாகச் சொல்லியபடி, அனுதினமும் சகோதரியை, ஆங்காங்கும் அனுப்புகிறார், தூது. அந்தச்சகோதரி, ஸ்விட்சர்லாந்தில் செய்த பணவிரயம், ஊர் சிரித்தது! பண்டிதரின் உற்ற நண்பராய் ஓடோடி அலையும் கிருஷ்ணமேனன் லண்டனில் செய்த பணவிரயம், உலகம் சிரித்தது! அவரோ, அதிமேதாவி எனப் புகழப்படுகிறார். ரயில் இலாகாவில் நடந்த வீண் செலவை 'கல்கி'யே கண்டித்து எழுதிற்று—ஆனால் அந்த இலாகாவின் மந்திரியாக இருந்த சந்தானம் கவர்னரானார்! முன்ஷியின் கதையும் அதுதான்!!

* • *

இதோ சில தகவல்கள்—'சோஷியலிஸ்டு' ஏடு தருவது:—

“மத்திய பிரதேச காங்கிரஸ் பிரதமர் ரவி சங்கர் சுக்லாவின் மகனும் காங்கிரஸ் பார்லிமெண்ட் அங்கத்தினருமான பகவதி சங்கர் சுக்லா என்பவர் பம்பாய் நகரில் ஒரு ஹோட்டலுக்குச் சென்று அங்குள்ள டெலிபோனை இலவசமாக உபயோகித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டார். ஹோட்டல் சொந்தக்காரர், அதற்கு இணங்க மறுத்தார். உடனே அந்த ஹோட்டல் முதலாளியை தாக்கிக் காயப்படுத்தினார், சுக்லா! ஹோட்டல் முதலாளியின் துணைக்குச் சென்ற போலீஸ்காரனையும் தாக்கினார், அவர்! இவர் காங்கிரஸ் பிரபலஸ்தராயிருப்பதால் மூன்று நாட்கள் வரை கைது செய்யப்படவில்லை! தாக்குண்ட நபர், இவ்விஷயத்தில், காங்கிரஸ் சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளாவிடின் கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்வதாக எச்சரித்தார். எனவே காங்கிரஸ் பிரதமர், மொராஜி தேசாயை கலந்தாலோசித்த பின்னர், போலீசார் சுக்லாவை கைது செய்து மாஜிஸ்ட்ரேட்டின் முன்பு கொண்டுவந்தனர். மாஜிஸ்ட்ரேட் அவர்களே சுக்லாவுக்கு ஜாமீன் கொடுத்தார்!”

*

“பண்டிதநேரு சர்க்காரில் எவ்வளவு தூரம் ஊழல் மலிந்து கிடக்கின்றது என்பதுபற்றி ஒரு ரசமான தகவல் வந்திருக்கிறது. பாகிஸ்தான் இந்தியா பிரிவினை ஏற்பட்டபோது, இராணுவ தளவாடங்களும் இரண்டாகப் பிரித்துக் கொள்ளப்பட்டன. இவ்விஷயத்தில் இந்திய சர்க்கார் பாகிஸ்தானுக்கு சில கோடி ரூபாய்கள் தரவேண்டியதாயிற்று. வேறு சில விவகாரங்களில் பாகிஸ்தான், இந்திய சர்க்காருக்கு பணம் தரவேண்டியிருந்ததால் இப்பணத்தை பாகிஸ்தானுக்கு தராது நிறுத்திவைத்தனர். பாகிஸ்தான் பிரதமர் மகமது அலி சென்ற பிப்ரவரி மாதம் கிழக்கு வங்காளத்தில் தேர்தல் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது இதுபற்றிக்குறிப்பிட்டுப் பேசுகையில், பாகிஸ்தானுக்கு 15 கோடி ரூபாய்கள் பணம் இந்திய சர்க்காரிடமிருந்து சேரவேண்டும் என்றும் இதைக் கொடுக்காமல் இந்திய சர்க்கார் தட்டிக்கழித்து வருவதாகவும் குற்றம் சாட்டினார். உடனடியாக மகமது அலியின் குற்றச்சாட்டுக்கு மறுப்பளிக்கவேண்டும் என்று கருதி இந்தியசர்க்கார் புள்ளிவிவரங்களை சேகரிக்கத் தொடங்கினார்கள். பண்டித நேருவின் 'குடும்ப இலாகாவாக விளங்கிவரும் அயல்நாட்டு இலாகா, நிதி இலாகா, பாதுகாப்பு இலாகா ஆகிய மூன்று இலாக்காக்களும் தனித்தனியாக புள்ளிவிரங்கள் சேகரிக்க ஆரம்பித்தனர். மூன்று இலாகாக்களின் கணக்குகளும் ஒன்றுக்கொன்று முரணாக இருந்தன. இறுதியில் மூன்றுமாதம் கழித்து அதாவது ஜூனின் மாதத்தில்தான் அவர்கள் கணக்குபோட்டு முடித்தார்கள்! பாகிஸ்தான் சர்க்காருக்குச் சேரவேண்டியது 15 கோடி அல்ல; 5 கோடி ரூபாய்தான் சேரவேண்டும் என்று 'தஸ்தாவேஜுக்கள் மூலம் முடிவுக்கு வந்தனர்! பாகிஸ்தான் பிரதம மந்திரி குற்றம் சாட்டியது பிப்ரவரி மாதம்; அதற்கு மறுப்பு கொடுப்பதற்குகாக இந்திய பிரதம மந்திரி புள்ளிவிபரம் சேகரிப்பதற்கே மூன்றுமாதம் ஆகிவிட்டது! ஆறின 'கஞ்சி பழங்கஞ்சி' என்பதுபோல நாட்கள் அதிகமாகிவிட்டதால் இந்திய சர்க்கார் பதில்சொல்ல முடியாமல் தர்மசங்கடத்தில் மாட்டிக்கொண்டு மௌனமாயிருந்து வருகின்றனர்! ஒரு அயல்நாட்டுக்கு நாம் எவ்வளவு பணம் பாக்கியிருக்கிறது என்பதை உடனடியாக கணக்குபோட்டு தெரிந்துகொள்ள முடியாத அளவுக்கு காங்கிரஸ் சர்க்காரில் ஊழல் மலிந்துகிடக்கிறது!”

*

'காங்கிரஸ் ஆட்சியில் சலுகை பெற்றவர்கள் பண்டித நேருவின் குடும்பத்தினர்தான்! இந்தியநாட்டிலாகாவில் பிரதான பதவிகளில் எல்லாம் நேரு குடும்பத்தினர்தான் இருக்கின்றனர். இதோடு நேரு குடும்பத்தினருக்கு இந்தியாவில் செல்லுமிடங்களிலெல்லாம் சலுகைகள் கிடைத்து வருகிறது. சிம்லாவில், சர்க்கார் சிப்பந்திகளுக்காக விடுதிகள் கட்டப்பட்டிருக்கின்றன. பண்டித நேருவின் சகோதரியான விஜயலட்சுமி பண்டிட்டின் மகள் ரீட்டா சிம்லாவுக்குவந்து ஓய்வு எடுத்துக்கொள்ள விரும்பினார்.

இதைப்பற்றி நான் ஒன்றும் குறைகூற விரும்பவில்லை! பொதுக் காரியங்களில் ஈடுபட்டு வருபவர்களுக்கு கொஞ்சமாவது 'ஓய்வு' வேண்டாமா? திருமதி ரீட்டா அம்மையார் சிம்லாவில் ஹோட்டலில் தங்க விரும்பவில்லை. ஒரு தனி பங்களாவில் தங்க விரும்பினார். ஆனால் அது சமயம் தனிப்பட்ட வசதியான பங்களாக்கள் கிடைக்கவில்லை. உடனே கிழக்குப் பஞ்சாப் கவர்னராக இருந்த சி.பி. என். சிங் அவர்கள் சிம்லாவில் சர்க்காருக்கு சொந்தமான விடுதியில் வாடகைக்கு இருந்த சர்க்கார் சிப்பந்திகளை அங்கிருந்து உடனடியாக வெளியேற்றுமாறு உத்திரவிட்டார்; சர்க்கார் சிப்பந்திகள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு ஹோட்டலில் வாடகைக்கு அறைகள் எடுத்து தங்க நேர்ந்தது. திருமதி ரீட்டாவுக்கு காலி செய்

யப்பட்ட விடுதியை இலவசமாக தங்க ஏற்பாடு செய்தார், கிழக்கு பஞ்சாப் கவர்னர்! அவர்களுக்கு உணவு வசதிகளும் சர்க்கார் செலவில் செய்து தரப்பட்டன! வெளி நாட்டிலிருந்து அரசாங்க அழைப்பில் விஜயம் செய்யும் பிரபலஸ்தர்களுக்குத்தான் இவ்வித உபசாரங்கள் செய்வது, சர்க்கார் சம்பிரதாயம். ஆனால் இப்பொழுதோ, பண்டித நேருவின் குடும்பத்தின் எட்டிய உறவினராக இருந்தால்கூட இந்தகைய 'ராஜோபசாரங்கள்' இலவசமாக நடைபெறும்!"

* * *

இந்தக் காட்சிகள், இங்கே! இப்படிப்பட்ட, ஊழலும், அட்டகாசமும், இங்கே, அந்தஸ்தையும் பதவிகளையும் தருகிறது.

அங்கே அந்தச் சொல்லே சுட்டெரிக்கிறது—அமைச்சரை! உடனே விலகுகிறார்!!

அது, அல்லவோ, நாடு!!

'ஜோசியம்'—ஒரு நிகழ்ச்சி

"எவ்வளவு பெரிய ஜோசியர் தெரியுமா, அவர்? எதைப் பற்றிக் கேட்டாலும் பதில் சொல்வார்! திருட்டுப்போன சொத்தா—பரீட்சையில் பாஸாகுமா—கிராஸ் வேர்ட்ஸ் போட்டியில் பரிசுகிடைக்குமா—வியாபாரத்தில் லாபம்வருமா—மனதிலிருப்பவள் மனைவியாவாளா, எதைப்பற்றிக் கேட்டாலும் பதில் சொல்கிறார்! அப்படியே, நடக்கிறது!! ஆச்சரியமான, ஆளப்பா...", என்று அக்கம்பக்கத்திலிருப்போர் சொல்லிடக் கேட்டான் அவன்! ஆனந்தம் மலர்ந்தது முகத்தில்! ஓடினான் வீட்டுக்கு!!

"கவலைப்படாதே! திருட்டுப் போன நகைகள் யாவும் கிடைத்துவிடும்" என்றான், மனைவியிடம்.

"போலீசார், திருடனைப்பிடித்து விட்டார்களா?" எனக் கேட்டாள் அவள்.

"இல்லை! என்றாலும், திருடனைக் கண்டுபிடிக்க புதுவழி தெரிந்துவிட்டது—புறப்படுபோகலாம்" என்று அவளையும் அழைத்துக்கொண்டு கிளம்பினான்—ஜோசியரிடம்.

*

அவரென்ன சாமான்யப்பட்டவரா! கூடிநின்றோர் ஏராளம்! எவ்வளவோ, விஷயங்களைப்பற்றிக் கேட்டுச் செல்ல, வந்திருந்தனர், பலர். ஒவ்வொருவருக்கும் தக்க பதிலை அளித்துக்கொண்டிருந்தார், ஜோசியர். கடைசியில், நமது தம்பதிகள் சென்று, விஷயத்தை விளக்கினர். ஜோசியர், மைபோட்டுப் பார்த்தார்! தெற்கையும் வடக்கையும் பார்த்தார்! சிலபல வார்த்தைகளை உச்சரித்தார்! தெரிகிறதுபார்? என்றார். தெரியாது உனக்கு!—என்றார். திருட்டுப்போன பொருள் நிச்சயம் கிடைத்துவிடும்! தெரிவிக்கிறது, என் ஜோசியம்!—என்றார்

கணவன் முகத்திலே, ஆனந்தம். போலீசாரால்கூட இவ்வளவு உறுதியாகச் சொல்லமுடியவில்லை—இவர் எவ்வளவு நம்பிக்கையுடன் கூறுகிறார்—என்று எண்ணியபடி, திருட்டுப்போன நகைகள்வந்துவிட்டது போன்ற ஆனந்தத்துடன் மடியிலிருந்த பணத்தை அவரது அடியில் வைத்துவிட்டுக் கிளம்பினான். 'அப்பனே! நீ. ரொம்ப நல்லவன். உன்சொத்து வீண் போகாது. நிச்சயம் கிடைத்துவிடும்' என்று உறுதியாகச் சொல்லியனுப்பினார்.

*

ஜோசியர் இருந்தஇடம், ஈரோடு! திருட்டுக் கொடுத்தவனின் ஊர், சிவகிரி!! ஜோசியம் கேட்டுவிட்டு தம்பதிகளிருவரும் துணைவந்த மற்றொரு பெண்ணுமாக, ஈரோட்டிலிருந்து சிவகிரிக்குச் செல்லுகின்றனர்—ஜோசியரின் புகழைப்பற்றிப் பேசியபடி! கணவன், சொல்கிறான்—"அடடா! வெற்றிலையில் அந்த மையைத்தடவி, குத்துவிளக்கில் காண்பித்தார்—திருடன் உருவம் தெரிந்தேவிட்டதே!!"

மனைவி, கேட்கிறாள். "அந்தஉருவத்தை நீ பார்த்தாயா?"

"இல்லே! அதான் அவரே சொன்னாரே!!"

"ஆமாம்! எவ்வளவு 'கரெக்டா' சொன்னார், பார்த்தியா? தொலைஞ்சு போனதெல்லாம் இன்னும் ஒரு வாரத்திலே வந்துசேரும்னு சொன்னாரே!"

"ஆமாம்! உழைச்சவன் சொத்தப்பா, அது. இரண்டகம் செய்திட யாராலும் முடியாது, என்றும் சொன்னாரே!"

"அப்ப, நிச்சயம், நகை கிடைச்சுடும்!"

"அஷ்டமத்திலே இருந்த சனி, நேற்றுத்தான் விலகியிருக்கானும்! சுக்கிரதசை கூடவரும்னுசொன்னாரே!"

தம்பதிகள் இருவரும், நகை கிடைக்கும்என்று எண்ணி, ஜோசியரின் சொல்லை நம்பி, பெருமகிழ்ச்சியுடன் திரும்பி, சென்றுகொண்டிருந்தனர்.

திடீரென்று, ஒரு குரல்! 'யாரது போகாதே!"

திடுக்கிட்டு நின்றனர், மூவரும்! தடி! கம்பு! அரிவாள்!—ஆயுதங்களோடு, பலர், ஓடிவந்தனர். தாக்கினர்! ஓடினர்!! கொஞ்ச நேரத்துக்குள், நடந்துவிட்டது—மனைவியின் கழுத்தில் ஜோசியரிடம் போனபோது போட்டிருந்த தாலிச்சரடு இப்போதுஇல்லை! கையிலும் காலிலும் கிடந்த நகைகள் இல்லை!! திருடுகொடுத்தது, திரும்பிவரும் என்றார் ஜோசியர். உள்ளதும்போய் விட்டது, ஒரு நிமிஷத்தில். கணவன், மனைவியைப் பார்த்தான்! மனைவி, கணவனைப்பார்த்தாள்!!—இப்போது; அவர்கள் ஜோசியரிடம் செல்லவில்லை. போலீஸ்டேஷனில் போய் புகார்செய்திருக்கின்றனர்! போலீசார் புலன்விசாரிக்கின்றனர்!!

நடந்த சம்பவம், இது.

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

மந்திரி சபை மாறிக்கொண்டிருந்திருக்குமா? எனவே, அவனை ஏளனம் செய்தனர்! கேலி பேசினர்! கிஞ்சித்தும் காது கொடுத்துக் கேட்கவில்லை.

*

இந்தோ சீனப்போர், அவன் கூறியபடியே, நடந்து கொண்டிருந்தது! எங்குபார்த்தாலும், பிரான்சுக்குத் தோல்வி!! அவன் சொன்னது போலவே! எவ்வளவு துருப்புகள் சென்றாலும், அமெரிக்காவின் உதவிகிடைத்தாலும், வெற்றி சுதந்திர வீரர்கள் பக்கமே போய்க் கொண்டிருந்தது! தோல்வியே, பிரான்சுக்குப்பரிசாகக்கிடைத்தது!! அதன் காரணமாக, ஜூன் 10-ந் தேதி, பிரெஞ்சு மந்திரி சபை, கவிழ்ந்தது. இவனைப் பொறுப் பேற்கச் சொல்லினர்! மகிழ்வோடு ஏற்றான்—இன்னும் ஒரு திங்களில் இந்தோசீனப் போரை நிறுத்துவேன் என்று வீரமுழக்கம் செய்தான். அதேபோல், செய்து முடித்தான்! உலக அரங்கமே, வியக்குமளவுக்கு, பாராட்டுரை பெற்றான்!! அவன் தான், மெண்டஸ் பிரான்ஸ்.

*

சிறு வயதுமுதலே அரசியலில் அக்கரை காட்டிய வீரனும், மெண்டஸ் அவனுடைய நடவடிக்கைகளைப்பற்றி, ஊரார் இவ்வண்ணம் பேசிக் கொள்வார்களாம்.

"யாரப்பா! அந்தச் சிறுவன்?"

"சிறுவனல்லப்பா. தீப்பொறி!"

"என்ன சொல்லிக் கொண்டிருக்கிறான், அங்குள்ள இளைஞர்களிடம்!"

"மக்களின் எண்ணங்களுக்கு ஆள்வோர், மதிப்புக் கொடுக்க வேண்டுமாம்!!"

"புரட்சிவாடை, பிடித்தவனோ?"

"ஆள், சாது. அப்படித் தெரியவில்லை"

ஆங்காங்கும், மாணவர்களைத் திரட்டி முற்போக்குக் கொள்கைகளைப் பேசுவானாம்! அதனால், அடிக்கடி, பாசிஸ்டு கட்சியினருக்கும் அவனுக்குமிடையே அடிபிடிச் சண்டைகள் நடக்குமாம். ஒரு முறை, அவனுடைய, மூக்கையே உடைத்துவிட்டனராம், எதிரிகள்! அப்போது, அவனுக்கு வயது 19!! இளவயதுமுதல் பிரான்சு நாட்டைப்பற்றி எண்ணி, அதன் அழகையும் ஆடம்பரத்தையும், புகழையும் பொன்தரும் பூமியையும் பற்றி சிந்தித்து, தீர்க்கமான முடிவுகளுடன், அரசியலில் புகுந்தான். பழுத்த அறிஞர்களும் நரை மூத்த கிழவர்களும், மக்கள் மனம் கவர்ந்த தலைவர்களும் விளங்கிய அரசியல் கூடத்துக்குத் தன்னுடைய இளவயதிலே எடுத்தடிவைத்தவன், மெண்டஸ் இன்றும் வயது 47-தான்! தன்னுடைய நுண்ணிய அறிவால், மக்களின் உண்மையான சங்கடங்களையும் மனோபாவங்களையும் அறியும் ஆற்றலைப் பெற்றான். அதனால், அவனுடைய தீர்க்க தரிசனங்கள் யாவும், சொல்லியபடி நடந்தன! மக்களை திகைக்கச் செய்தன!! அதன் கடைசி கட்டமாக அமைந்ததுதான், இந்தோ சீனப் போர்.

"நம்முடைய நாட்டையே கட்டிக் காக்க முடியாத நாம், பிறரின் நாடுகளைப் பிடித்தடக்கி வாழ விரும்புவதேன்? என்றுவது இயலுமா!" என்பதுதான். அந்த எண்ணத்தினாலேயே, போரும் புகைச்சலும் சூழ்ந்து கிடந்த இந்தோசீனாவில், அமைதி நிலவச் செய்திருக்கிறான்! இவ்வண்ணம் செய்யக்கூடியோர், பலர், இருக்கலாம்—ஆனால், கைவசமிருக்கும் நாட்டை இழந்து, அதன் மூலம் தமது கண்ணியத்தையும் பெருந்தன்மையையும் நிலைநாட்டிக் கொள்வோர், மிகச்சிலரே. அவர்களில், இங்கிலாந்துக்கு அட்லியைச் சொல்லலாம்! இப்போது மெண்டஸைக் கூறலாம்!!

உலக வானில், திடீரென புகழ் பெற்றுவிட்டான், மெண்டஸ்—தன்னுடைய பெருந்தன்மை மூலம். இந்தோசீனா பிரச்னையைத் தீர்த்ததுபோல, இந்தியத் திட்டுகளைப் பற்றியும், மெண்டஸ் ஒரு முடிவு செய்து விட்டால், அந்த வீரனைப் போன்ற ராஜதந்திரி யாருமேகிடையாது! ஆணவச் செருக்கால் அழியும், பிரான்சும், காப்பாற்றப்படும்! இந்திய நாட்டினரின் நல்லெண்ணமும் கிடைக்கும்!! இப்படிப்பட்ட அரசியல் விவேகிகள், மிகச்சிலர் தான். அவர்களிலே ஒருவனாகிவிட்ட மெண்டஸ் பிரான்ஸ், வாழ்க!

❀

சென்சார்பற்றி...!

— ராஜமன்னார் —

"சென்சார்! சென்சார்!!"—முற்போக்கு எழுத்தாளர் எவராது தீட்டிய கதையென்றால், திரைப் பட உலகில், இந்தக் கிலி ஆட்டிப் படைக்கிறது எல்லோரையும். டில்லிபீடம் வைத்திருக்கும் இந்த 'சென்சார்' போர்டு, இட்டதே சட்டம்! வைத்ததே கட்டளையாகும்!! இதனால், பல படங்கள், குரல்வளை நெறிக்கப்பட்டு, கதை சிதைக்கப்பட்டு, உருக்குலைந்த பெண் போல், உலவநேரிடுவதும் உண்டு. இத்தகைய 'சென்சார் போர்டு' ஒன்று தேவையா?—கூடாவே கூடாதென்கிறார், சென்னையின் பிரதம நீதிபதி! ஆக. 9ந்தேதி சென்னையில் நடைபெற்ற விழாவொன்றில், அவர் வழங்கியிருக்கும் வார்த்தைகளை, மக்கள்முன் வைக்கிறோம். 'என்னுடைய சொந்த அபிப்பிராயம்' என்றே பி. வி. ராஜமன்னார் கூறியிருக்கிறார். எனினும், அவர் ஒரு நீதிபதி! சென்னைமாநிலத்தின் பெரும் நீதிபதி!! அவரது கருத்தை அடக்குமுறையால் வாழநினைக்கும், அரசின் பார்வைக்கு வைக்கிறோம்—

"தணிக்கை செய்வதென்கிற முறை எந்தவகையிலும் இருக்கக் கூடாது என்பதே, என்னுடைய கருத்தாகும். இப்படிச் செய்வதால், எதிர்பார்க்கும் பலன் எதுவும் கிட்டவே முடியாது. மக்களிடையில் துவேஷத்தை உண்டு பண்ணுவது, அல்லது ஆபாசத்தைப் புகுத்துவது என்று சொன்னால் அத்தகைய படங்களைப்பற்றி நடவடிக்கையெடுக்க சாதாரணச் சட்டத்திலேயே இடமிருக்கிறது. ஒரு புத்தகத்தில் ஆபாசமான விஷயங்கள் இருப்பதாகப் புகார் கூறப்பட்டால், அவைகளை நீதி மன்றத்துக்கு முன், சர்க்கார் இன்று கொண்டு வருகிறது. அந்தப் புத்தகம் வெளியாகி, படித்த பிறகு தான், இந்நடவடிக்கை எடுக்கப்படுகிறதே ஒழிய, எழுதியதும் அதை ஒரு 'போர்டு' உட்கார்ந்து பரிசீலனை செய்து, பிறகு பிரசுரிக்கப்படுவது கிடையாது. அதுபோலவே, படங்களையும் செய்வதால், ஆகாயமா இடிந்து விடப் போகிறது!"

XX

காஞ்சிக்கு வருக! வருக!!

ஆக 21, 22
தேதிகளில்

செங்கற்பட்டு மாவட்ட
மாநாடுகள்

கண்ணன் டாக்கீஸ்
மைதானத்தில்
மாபெரும்
பந்தலில்

சமூக சீர்திருத்த மாநாடு

தலைவர்:

கலைவாணர் **என். எஸ். கிருஷ்ணன்**

துவக்குபவர்:

நடிகச்செல்வர் **எம். ஜி. ராமச்சந்திரன்**

★

அரசியல் மாநாடு

தலைவர்:

இரா. சு. தங்கப்பழம்

துவக்குபவர்:

எம். எஸ். மணி

பொதுச்
செயலாளர்
சி. என். ஏ.

*

எல்லா கழக
தோழர்களும்
கலந்துகொள்வர்

*

மாவட்ட
செயலாளர்களும்,
சட்டசபை
உறுப்பினர்களும்
பங்கேற்பர்.

முதல் நாள்	நாடகங்கள்	2-ம் நாள்
அம்மையப்பன் (மு. கருணாநிதி)		**சந்திரமோகன்** (சி. என். ஏ.)

எஸ். எஸ். ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி, எம். என். கிருஷ்ணன், எஸ். தெட்சணாமூர்த்தி, எம். ஆர். சாமிநாதன், ஜி. சகுந்தலா முதலியோர் நடிப்பது.

இரு நாட்களுக்கும் அனுமதி விவரம் (நாடகங்கள் உட்பட)

வரவேற்பாளர் ரூ. 5, பிரதிநிதி ரூ. 3, பார்வையாளர் ரூ. 1. பெண்கள் அணா 8

பந்தலில் உணவு வசதி உண்டு : : நன்கொடையாளருக்கு தனி இடம்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.